



# The Trumpet of the Seventh Angel

# ஏழாம் தூதனின் எக்காளம்

1879-1916 ரீ-பிரிண்ட்ஸ் தமிழாக்கம்

மலர் - 10, இதழ் - 2, மார்ச் - ஏப்ரல் 2024

**R4746**

## REGARDING THE WORD FEAR
## பயம் என்ற வார்த்தையைப்பற்றி

"அவர்கள் பயப்படுகிற பயம் மனுஷராலே போதிக்கப்பட்ட கற்பனையாயிருக்கிறது." ஏசாயா 29:13

பயம் என்ற வார்த்தை ஒரு இணைப்பிலோ அல்லது வேறொன்றிலோ பயன்படுத்தப்பட்டாலும் அது ஒன்றுதான் என்று நாம் புரிந்து கொள்ளுகிறோம். வெவ்வேறு வகையான பெர்ரி பழம், வெவ்வேறு வகையான பார வண்டிகள், வெவ்வேறு வகையான மிருகங்கள் இருப்பது போல வெவ்வேறு வகையான பயமும் இருக்கின்றன. அதன் நோக்கம் அல்லது ஆரம்பம் எதுவாக இருந்தாலும் பயம் என்பது பயம் தான். ஒரு சரியான வகையான பயமும் ஒரு சரியான வகையான அச்சமும் இருக்கிறது. சரியான பயம் இந்த அச்சத்தையும் அதனுடன் பெற்றிருக்கிறது. உங்களுக்கு ஒரு ராஜா அல்லது சக்ரவர்த்தியுடன் அறிமுகம் கிடைத்தால், நான் புண்படுத்தும்படி, காயப்படுத்தும்படி ஏதாவது செய்துவிடுவேனா என்று பயப்படுகிறேன் என்று நீங்கள் சொல்லலாம். இதே போல நம்முடன் இருக்கிறது. கர்த்தரை கோபமூட்டும் எதையும் செய்ய நாம் அஞ்ச வேண்டும்.

நமது கர்த்தராகிய இயேசு சொன்னதாவது: "ஆத்துமாவை கொல்ல வல்லவராயிராமல், சரீரத்தை மாத்திரம் கொல்லுகிறவர்களுக்கு நீங்கள் பயப்பட வேண்டாம். ஆத்துமாவையும் சரீரத்தையும் கெகன்னாவிலே அழிக்க வல்லவருக்கே பயப்படுங்கள்." தேவனிடம் நாம் பெற்றிருக்க வேண்டிய மிக முக்கியமான ஒரு பயமாக இது இருக்கிறது. நாம் அவரது உயர்ந்த தன்மையையும் நமது சிறிய தன்மையையும் அதிகம் மதிக்கிறவர்களாக இருக்க வேண்டும். நாம் அவரது பிரசன்னத்திற்குள் ஜெபத்தில் செல்லும் போது சரியானபடி பயபக்தியுடனும் செல்ல வேண்டும். அவர் ஒரு மகா ராஜா என்பதை நாம் மனதில் கொள்ள வேண்டும். நாம் கர்த்தரோடு தொடர்பு கொள்ளும் போதெல்லாம் இந்த பயபக்தி குறையும்படி எதையும் செய்யாதபடி நாம் அச்சப்பட வேண்டும் என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும். நாம் முத்திரையிடப்பட்டிருக்கும் பரிசுத்த ஆவியை துக்கப்படுத்தும் அல்லது துன்பப்படுத்தும் எந்த காரியத்தையும் செய்யாதபடி நாம் கவனமுடன் இருக்க வேண்டும்.

"அவர்கள் பயப்படுகிற பயம் மனுஷராலே போதிக்கப்பட்ட கற்பனையாயிருக்கிறது" என்கிற நமது பாடத்தின் வசனத்தை கவனிப்போம். ஒரு தவறான பயம் இருக்கிறது என்பதை தீர்க்கதரிசி மூலமாக கர்த்தர் நமக்கு குறிப்பிட்டு கூறுகிறார் என்பதை நாம் புரிந்து கொள்ளுகிறோம். நாம் கேள்விப்படுகிற கத்தோலிக்க சபையின் கூற்று: நான் தேவனால் அங்கீகரிக்கப்பட்டால், முதலாவது நான் சில பரிசுத்தவான்களிடம் ஜெபிக்க வேண்டும். பிறகு அவர்களிடம் மரியாளிடம் பரிந்து பேசும்படி கேட்க வேண்டும். அதன்பிறகு மரியாளிடம் மகனிடம் பரிந்து பேசும்படி கேட்க வேண்டும். அவர்கள் பயத்தினால் பிதாவானவரை கற்பிக்கவில்லை. இது மனிதர் போதனையினால் வந்ததாக இருக்கிறது. சில வேத வாக்கியங்கள் குறிப்பிடுவது போல, தேவனைப் பற்றிய உயர்ந்த காரியங்களை எடுத்துவிட்டு, "பிசாசுகளின் உபதேசங்களை" நுழைத்திருக்கிறார்கள்.

### கர்த்தர் தலைமையாக இருக்கிறார்

வசனம் கூறுகிறதாவது: "இந்த ஜனங்கள் கட்டுப்பாடு என்று சொல்லுகிறதையெல்லாம் நீங்கள் கட்டுப்பாடு என்று சொல்லாமலும், அவர்கள் பயப்படுகிற பயத்தின்படி நீங்கள் பயப்படாமலும் கலங்காமலும் இருங்கள்." (ஏசாயா 8:12) இங்கே சொல்லப்பட்ட பயமானது ஜனங்களை வழிநடத்துகிற விசேஷமாக தலைவர்களை வழி நடத்துகிற ஒரு சபை கூட்டமைப்புக்காக கூக்குரலிடுகிற பயமாக இருக்கும். இது இடம் பெறவில்லையென்றால், அங்கே பெரும் ஆபத்து இருக்கும். கர்த்தர் தலைமையாக இருக்கிறார் என்பதை அவரது பிள்ளைகள் அறிவார்கள். அவர் இந்த காரியங்களில் அவர்களை வழிநடத்துவார் என்பதையும் இந்த கூட்டமைப்புகளில் அவர்கள் சேரக்கூடாது என்பதையும் அவர்கள் அறிவார்கள். இங்கே கூட்டமைப்பு என்பது சபை கூட்டமைப்புக்கு மேலானதை அர்த்தப்படுத்துகிறது. "அவர்கள் பயப்படுகிற பயத்தின்படி நாம் பயப்படக்கூடாது." அதாவது அவர்கள் பயப்படுவது போல நாம் பயப்படக்கூடாது என்பதே. நமது பாதுகாப்பு மனித சக்தியின் மேல் சார்ந்திருக்கவில்லை. ஆனால் அவர்கள் தங்கள் இருதயங்களை கர்த்தருக்கு கொடுத்திருந்தால், அவர்களது சகல வழிகளிலும் அவரை சந்தோஷப்படுத்த நாட வேண்டும். மேலும் சகலத்தையும் அவர் அவர்களது நன்மைக்கு ஏதுவாக நடத்துவார் என்பதையும் ஞாபகத்தில் வைக்க வேண்டும்.

அச்சம் என்பது என்ன என்று அவர்கள் அறியாதிருக்கிறார்கள். தொழிலாளர் கூட்டமைப்பு அவர்களது அறக்கட்டளை கூட்டமைப்பின் பயத்தினால் வழி நடத்தப்படுகிறது. இதில் அவர்கள் பயத்தின் ஆபத்தின் தாக்கத்தை ஏற்படுத்துகிறது. இவ்விதமாக கர்த்தரின் ஜனங்கள் பயப்பட வேண்டியதில்லை. அவர்களது வழிகளிலும் அவர் மேல் உள்ள அக்கறையிலும் உறுதி பண்ணவும் விசுவாசத்தின்படி நடக்கவும் அவர் சகலத்தையும் அவர்களது நன்மைக்கு ஏதுவாக நடத்துவார் என்பதை அங்கீகரிக்கவும் வேண்டும். மேலும், அவர் அவர்களுக்கு தேவையான வழிகாட்டுதலையும் அறிவுறுத்தல்களையும் கொடுத்து அவர்களை முடிவு வரை உற்சாகப்படுத்துவார்.

இந்த கூட்டமைப்பின் மீது தயவான மனோபாவத்தை நாம் கொண்டிருக்க வேண்டும். பூமிக்குரிய ஸ்தாபனங்களை பராமரிப்பதற்கு இந்த கூட்டமைப்பின் அவசியத்தை நாம் காண்கிறோம். இப்படியாக சமூக வியாபாரத்தின் வழியில் இந்த நிலையை எடுப்பவர்களுக்கு ஓரளவுக்கு சாக்குபோக்கு

இருக்கிறது. எனினும் அதே சமயம் நமது தயை தெய்வீக வார்த்தைகளினால் முறைப்படுத்தப்படவேண்டும். இந்த எல்லா சிக்கல்களிலிருந்தும் முடிந்த வரை தெளிவான நிலையை காண்கிற அனைவருக்கும் இது இன்றியமையாததாக இருக்கிறது. அவர்களது ஆலோசனையை பெற விரும்புகிறவர்கள் அனைவருக்கும் அது உதவிகரமாக இருக்கும். அவர்களது அனுதாபம் தொழிலாளர் சங்கங்களுக்கு சொல்லக்கூடியது உதாரணத்திற்கு: "நாங்கள் உங்கள் கஷ்டத்தை காண்கிறோம். உங்களுடைய ஸ்தாபனங்களின் மூலமாக ஒரு ஸ்திரத்தன்மையை பராமரித்திருப்பதை நாங்கள் பார்க்கிறோம். ஒரு குறிப்பிட்ட அளவிற்கு உங்கள் நிலைமையில் நாங்கள் அனுதாபம் கொள்ளுகிறோம். எனினும் பேரழிவுகளை தவிர்ப்பதற்கு பதிலாக, முடிவில் உங்கள் ஸ்தானம் உங்களை தொந்தரவில் ஈடுபடுத்துவதற்கு உதவும் சந்தேகமேயில்லை, மற்றவர்களையும் தொந்தரவில் ஈடுபடுத்த உதவும்."

எது விடுதலை செய்யும் என்பதை கர்த்தருடைய பிள்ளைகள் அறிவார்கள். தேவனைப் பற்றிய சத்தியம், அவரது குணலட்சணம், அவரது சகோதரர்கள், கிடைக்கும் சமயத்திற்குத்தக்கதாக எல்லா மனிதர்களுக்கும் நன்மை செய்ய நாடுவதில் நிலைத்திருக்க வேண்டும்.

**R4747**

## THE RANSOM AND THE CHURCH
## மீட்கும் பொருளும் சபையும்

"எல்லாரையும் மீட்கும் பொருளாகத் தம்மை ஒப்புக்கொடுத்த மனிதனாகிய கிறிஸ்து இயேசு அவரே." 1தீமோத்தேயு 2:6

மீட்கும் பொருள் (Ransom) என்ற வார்த்தை வேத வாக்கியங்களில் இரண்டு வெவ்வேறு பொருளில் பயன்படுத்தப்பட்டுள்ளது. ஒரு பொருள், மேலே உள்ள வசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. மற்றொன்று "அவர்களை நான் பாதாளத்தின் வல்லமைக்கு நீங்கலாக்கி இரட்சிப்பேன்."(Ransom) (ஓசியா 13:14) பின்னால் சொல்லப்பட்ட வசனத்தில் ரேன்சம் என்ற ஆங்கில வார்த்தை பாதாளத்திலிருந்து விடுவிப்பதை, பாதாளத்திலிருந்து இரட்சிப்பதை குறிக்கிறது. முதல் வசனத்தில் ரேன்சம் என்ற வார்த்தை மீட்கும் பொருளின் விலைக்கிரயம், ஒரு மனிதனுக்கான மீட்கும் பொருளின் கிரயம், மீட்கும் பொருள் "மனிதனாகிய கிறிஸ்து இயேசுவினால்" கொடுக்கப்பட்டது என்பதையும் நாம் புரிந்துகொள்ளுகிறோம். நமது கர்த்தர் மீட்கும் பொருளின் கிரயத்தை, அவர் யோர்தானில் ஞானஸ்நானம் பெற்றது முதல் கல்வாரியில் அவரது மரணம் வரை உள்ள மூன்றரை வருட காலத்தில் கொடுத்தார். ஆனால் அந்த சமயத்தில் அவர் அதை பயன்படுத்தவில்லை. (ஆனால் பின்னர் "நமக்காக சபைக்காக, தேவனுடைய பிரசன்னத்தில் தோன்றிய பொழுது") முழு உலகத்திற்காகவும் அதை இன்னும் பயன்படுத்தவில்லை. எனினும் உலகிற்காக "ஏற்ற காலத்தில்" அதை பயன்படுத்துவார். இப்பொழுது அவர் அதை ஒருசிறு வகுப்பாருக்காக அவர்கள் பிதாவானவரினிடத்தில் ஏற்றுக்கொள்ளும்படியாகவும், "கிறிஸ்துவினுடைய உபத்திரவங்களில் குறைவானதை அவருடைய சரீரமாகிய சபைக்காக" அவருடைய பாடுகளில் பங்குபெறும்படியாகவும், அவரது மாபெரும் மகிமையிலும் தேவனுக்கும் மனிதனுக்கும் மத்தியஸ்தராக அவரது பெரிய அலுவலில் பங்கு பெறவும் தமது புண்ணியத்தை சாட்டுதல் பண்ணிக்கொண்டிருக்கிறார்.

இப்படியாக சபையானது, பாவநிவாரண பலியில் ஒரு பங்காக இருக்கும்படியாக தற்கால பாடுகளில் அதன் கர்த்தருடன் ஒரு பங்கை பெறும். இது, அவர்கள் மீட்கும் பொருளில் பங்கு பெறுவார்கள் என்பதைக் குறிக்காது. ஏனெனில் மீட்கும் பொருளின் விலைக்கிரயம் என்பது ஒரு மனிதன் மட்டுமே, அநேக மனிதர்கள் அல்ல. ஆகையால் சபையின் பங்கு, பாவ நிவாரண பலியின் பங்காக, நமது கர்த்தரின் மீட்கும் பொருளின் விலைக்கிரயத்தோடு குழப்பிக் கொள்ளக்கூடாது. பாவ நிவாரண பலியில் கூட சபையானது பாவ நிவாரண பலியை கொடுக்கவில்லை. பிரதான ஆசாரியன் ஒரு காளையையும் மேலும் அவரே ஒரு ஆட்டுக்கடாவையும் பலி கொடுத்தார். காளையை பிரதான ஆசாரியனும், நம்மை பலியாக ஒப்புக்கொடுத்தாலும், உதவி ஆசாரியர்கள் ஆட்டுக்கடாவையும் பலி கொடுக்கவில்லை. இரண்டையும் பிரதான ஆசாரியனே பலி கொடுத்தார். அதிக பட்சம் நாம் பிரியமான பலிகளாயிருக்கும்படி நாம் அர்ப்பணம் பண்ண முடியும். பிறகு பிரதான ஆசாரியனே வந்து அவரது புண்ணியத்தை சாட்டுதல் செய்து, "ஆட்டுக்கடா"வினால் பிரதிநிதித்துவப்படுத்தப்பட்ட இந்த வகுப்பாரின் பலியை பிரியமானதாக ஆக்குகிறார். இப்படியாக நம் ஆண்டவர் செய்ததுபோல நாம் பாவ நிவாரண பலியில் பங்குபெறவில்லை என்பது தெரிகிறது. பிரதான ஆசாரியனின் பலி இரண்டு பகுதியாக இருந்தது. ஒன்று "காளை" மற்றொன்று "ஆட்டுக்கடா." காளை பிரதான ஆசாரியனையும் ஆட்டுக்கடா அவரது சீஷர்களையும் குறிக்கிறது.

### பாவ நிவாரண பலியில் நமது பங்கு ஒரு சலுகை

யாராவது ஒருவர், பிறகு சபை எங்கே தோன்றும் என்று கேட்கலாம். "ஆட்டுக்கடா"வில் சபை தோன்றாது என்று நாம் பதிலளிக்கிறோம். ஆனால் அர்ப்பணம் பண்ணப்பட்ட மானிடர்கள் பலியிடப்பட்ட ஆட்டுக்கடாவை குறிக்கிறார்கள். பலி கொடுக்கப்பட்ட போது (பிரதான ஆசாரியனின் பலி ஏற்றுக்கொள்ளப்பட்டு நாம் உதவி ஆசாரியர்களாக, பிரதான ஆசாரியனின் அங்கங்களாகிறோம். அதிலிருந்து அவரது அங்கங்களாக அவருடன் நன்மையான எல்லா காரியங்களிலும் பலியாகவும் வேறு விதமாகவும் ஒருபங்கை பெறுகிறோம். ஆனால் பரிசுத்த ஸ்தலத்தில் நமக்கு தனிப்பட்ட அடையாளமில்லை. பரிசுத்த ஸ்தலத்தில் உள்ள புது சிருஷ்டியாக குறிப்பிடப்படுகிறது. தனிப்பட்ட முறையில் புது சிருஷ்டியாக பிரதான ஆசாரியரிலிருந்து பிரிக்கப்படாமல், தெய்வீக திட்டத்தின்படி அவரது சரீரத்தின் ஒரு அங்கமாக அவரது வஸ்திரத்தின் கீழும் அவரது புண்ணியத்தின் கீழும் உள்ளே வருகிறார்கள்.

இந்த கருத்தை பின்பற்றி: சபையானது நமது கர்த்தரை பின்தொடர்ந்து மகா பரிசுத்த ஸ்தலத்திற்கு உதவி ஆசாரியர்களாக சென்று, நமது கர்த்தர் தமது இரத்தத்தை அங்கே தெளித்தது போல நாமும் நமது இரத்தத்தை தெளிப்போம் என்று எங்கேயும் குறிப்பிடப்படவில்லை. மாறாக, பிரதான ஆசாரியனே காளையின் இரத்தத்தை தெளித்து பிறகு அவரே தமது சொந்த சரீரமாக ஆட்டுக்கடாவின இரத்தத்தையும் தெளித்தார். ஆகையால் நாம் தனிப்பட்டவர்களாக அங்கே செய்வதற்கு ஒன்றுமில்லை. நாம் கிறிஸ்துவின் சரீரத்தின் அங்கங்களாகி அவரது நாமத்தை எடுத்துக்கொள்ளுவதால் நாம் நமது தனித்தன்மையை இழக்கிறோம். ஆகையால் நாம் அவரது மகிமையிலும் அவரது வேலையிலும் பங்கு பெறுவோம்.

### "நாம் அவருக்கு ஒப்பாயிருப்போம்"

எனினும் திரைக்குப்பின்னால் நமக்கு தனித்துவம்

இருக்காது என்று நாம் அர்த்தப்படுத்தவில்லை. ஏனெனில் நாம் அவருக்கு ஒப்பாயிருப்போம் என்று வேத வாக்கியங்கள் நமக்கு உறுதியளிக்கிறது. நாம் மகிமையான அலுவலகத்தைப் பொருத்தவரை நாம் தனித்துவத்தை பெற்றிருக்க மாட்டோம் என்பதே இதன் கருத்து. ஆனால் ஒரே ஒரு மெல்கிசேதேக் ஆசாரியரே இருக்கிறார். மற்றவர்கள் அனைவரும் பார்வையை இழந்திருப்பார்கள். அங்கே ராஜரீக ஆசாரிய அலுவலகம் இருக்கும். "சரீரமாகிய சபைக்கு எல்லாவற்றிற்கும் மேலான தலையாகிய" அவருடனான நமது உறவில் அதன் அனைத்திலும் நாம் பங்கு பெறுவோம். ஆகையால் தனிப்பட்டவர்களாக பலியில் நாம் செய்வதற்கு ஒன்றுமில்லை. தெய்வீக நிலைப்பாட்டின்படி, பாவ நிவாரண பலியின் வேலையில் நாம் பெற்றிருக்கும் இணைப்பு எல்லாம் அங்கீகரிக்கப்பட்டு, கிறிஸ்துவின் வேலையில் அடக்கப்பட்டுள்ளது. அது அவருடைய வேலை.

உலகத்திற்கான பாவ நிவாரண பலியில் சபையின் பங்கு அவசியம் என்பது கிடையாது. ஆனால் தெய்வீக ஏற்பாட்டினால் நாம் கிறிஸ்துவுக்குள் பரவும் அவரது மகிமையான உயர்ந்த சுபாவத்திலும் வேலையிலும் பங்குபெறவும் அனுமதிக்கிறது. பாடுபடுவது என்பது சபைக்கான வெறும் ஒரு சலுகையாக இருக்கிறது. மேலும் அது முழுவதும் தேவையற்றது. தெய்வீக தண்டனையாகிய மரணத்திலிருந்து உலகத்தை விடுவிப்பதற்கு தேவையானது கிறிஸ்துவின் மரணம் மட்டுமே.

நாம் பார்ப்பது போல, நமது சரீரங்களை ஜீவபலியாக ஒப்புக்கொடுக்கிற வேலைக்கும், மகா பிரதான ஆசாரியராக நம்மை பலியாக ஒப்புக்கொடுக்கிற நமது கர்த்தரின் வேலைக்கும் உள்ள வித்தியாசத்தை நமது மனதில் தெளிவாக வைத்துக்கொள்ளுவது மிகவும் முக்கியமானதாகும். இரண்டு காரியங்களும் நிழலில் காண்பிக்கப்பட்டது போல தெளிவாக வெவ்வேறானது. வெள்ளாட்டுக்கடா ஆசாரிப்புக் கூடாரத்தின் கதவிடம் கொண்டு வந்து கட்டப்படுகிறது. இது நாம் செய்யும் பலியின் உடன்படிக்கையை சித்திரமாக காட்டுகிறது. ஆனால் ஆடானது இன்னும் பலிகொடாமல் இருந்தது. அந்த பலியை செலுத்துவதற்கு பிரதான ஆசாரியனைத் தவிர வேறு யாரும் தகுதியனாவர்கள் இல்லை. பலி என்ற வார்த்தையின் சரியான அர்த்தத்தில், பிரதான ஆசாரியன் வெள்ளாட்டுக்கடாவை பலியிடும் வேலையே ஒரே பலியாக இருந்தது.

நம்மை ஒப்புக்கொடுத்து பிதாவானவர் ஏற்றுக்கொண்ட பிறகும், நாம் புது சிருஷ்டியாகவும், அவரது சரீரத்தின் அங்கமாகவும் அதனிமித்தம் ராஜரீக ஆசாரிய அங்கங்களாகவும் ஆன பிறகும் தொடர்ச்சியான வேலை இருக்கிறது. அதாவது தினமும் நம்மை ஒப்புக்கொடுப்பது ஆகும். ஆகையால் கர்த்தராகிய இயேசு இந்த சுவிசேஷ யுகம் முழுவதும் பலியை தொடருகிறார். அவர் கடைசியாக இந்த யுக முடிவில் இதை நிறைவு செய்கிறார். அப்பொழுது அனைத்தும் ஒரே பலியாக நிறைவடைந்து, புது சிருஷ்டிகள் அனைவரும் மகிமையின் சரீரத்தின் அங்கங்களாக அனுமதிக்கப்படுவார்கள்.

**R4749**

## INTERESTING QUESTIONS

# ஆவலை எழுப்பும் கேள்விகள்

# சபையிலும் வீட்டிலும் ஸ்திரீயின் நிலைமை

**கேள்வி:** பரிசுத்த பவுல் பழங்கால பாத்திரவான்களை (Ancient worthies) குறிப்பிடும்போது, வேசி ராகாப்பை (எபிரேயர் 11) தவிர வேறு பெண்களை குறிப்பிடப்படவில்லை என்ற உண்மையின் கருத்தில், எப்படி பெண்கள் சரிசமமான வாய்ப்பை புது சிருஷ்டியின் ஓட்டத்திலும் "பரம அழைப்பின்" பரிசிலும் பெற முடியும்?

**பதில்:** பெண்களுக்கு எதிராக பாகுபாடு காண்பிக்கிற வேத வாக்கியங்களில் எந்த இடத்தையும் நாம் பார்க்கத் தவறுகிறோம். அவர்கள் இந்த சுவிசேஷ யுகத்தில் கிறிஸ்துவுக்கு உடன் சுதந்திரராக இருக்கும் வாய்ப்பை பெற்றிருக்கிறார்கள். அதில் பால் இனம், நிறம் மற்றும் இனம் என்ற வேறுபாடு இல்லை.

வேத வாக்கியங்களில் பெண்களுக்கு எதிராக எதுவும் சொல்லப்படவில்லை. கர்த்தர் தம்முடைய காரியங்களில் சபையின் வாயாக இருக்கும்படி புருஷர்களை தெரிந்தெடுக்கிறார். இந்த காரியத்தில் கர்த்தருடைய சித்தத்தை கேள்வி கேட்க யாருக்கும் உரிமையில்லை. அவர் அறுபது வயது மனிதர்களை அல்லது வாலிபர்களை அல்லது பெண்களில் குறிப்பிட்ட வயது உள்ளவர்களை தெரிந்து கொள்ளுவதோ அல்லது எந்த பெண்ணையும் தெரிந்து கொள்ளாதிருப்பதோ அவரது சித்தம். தேவன் அவரது சொந்த விருப்பம் என்னவோ அதை செய்வார். ஆனால் அவர் அப்படி தெரிந்தெடுப்பதற்கான காரணத்தை நாம் பார்க்க முடியும். பெண் சபைக்கு அடையாளமாகவும் புருஷன் சபையின் தலைக்கு அடையாளமாகவும் இருக்கிறார்கள். சபையில் பெண்கள் போதகராக இருக்கக்கூடாது என்றும், ஆனால் புருஷர்கள் போதகராக இருக்க வேண்டும் என்றும் நாம் அறிவுறுத்தப்பட்டிருக்கிறோம்.

வேத வாக்கியங்களை விட்டு வெளியில் கூட, மானிட காரியங்களில் பெண்களின் நலன் ஆபத்தில் இல்லை என்பதைப் பார்க்கிறோம். ஏனெனில் ஒவ்வொரு பெண்ணும் ஒரு மனிதனின் சகோதரியாகவோ அல்லது தாயாகவோ அல்லது மகளாகவோ இருக்கிறாள். ஆகையால் இரு பாலாருமே நெருங்கிய உறவு உடையவர்களாக இருக்கிறார்கள். உதாரணத்திற்கு ஓட்டுப்போட முழு குடும்பமும் செல்ல வேண்டியது அவசியமில்லை. ஆனால் புருஷன் குடும்பத்தை பிரநிதித்துவப்படுத்துகிறான். இப்படியாக ஒரு பட்டணத்தில் ஒரு நகரத்தில், ஒரு நாட்டிலும் என்ன நடந்தாலும் அதில் பங்கு பெறுகிறார்கள்.

இல்லையென்றால் உண்மையிலேயே ஒரு திருப்தியற்ற நிலைமையை நாம் யூகிக்கக்கூடும். அது மனிதனுடைய இயல்பான தன்மையை இழந்ததைக் குறிக்கும். இன்னொரு வழியில் பெண்ணின் பங்கை அலட்சியம் பண்ணுவதைக் குறிக்கும். அப்போஸ்தலர் பெண்ணின் அதிகார வரம்பை நமக்கு நினைவுபடுத்துகிறார். மகன் தன்னை மதிக்கவில்லை என்றால் அந்த தாயானவள் அமைதியாக இருக்க வேண்டும். அவன் குழந்தையாக, வாலிபனாக இருந்த காலங்களில் அவளுடனேயே இருந்தான். இந்த காலம் முழுவதும் அவன் அவளிடம் மரியாதையை பெறும்படி கட்டளையிடவில்லை என்றால், அவள் தான் குறை கூறப்பட வேண்டும்.

பெண்கள் இந்த காரியங்களில் சரியான கவனம் செலுத்தவில்லை என்றால் பெண்களுக்கே அது கேடாக முடியும் என்று நாங்கள் நம்புகிறோம். தங்களுக்கு வீட்டில் கடமை இருக்கிறது என்பதை அவர்கள் உணர வேண்டும். எந்த ஒரு விதிக்கும் விதி விலக்குகள் உண்டு. எனக்கு சீக்கிரத்தில் உண்மை தெரியவந்திருந்தால், நான் எப்படி ஒரு நல்ல தகப்பனாக ஒரு சிறந்த தாயாக இருந்திருக்க வேண்டும் என்பதை அறிந்திருப்பேன் என்று கிறிஸ்தவ பெற்றோர்கள் எங்களிடத்தில் கூறியிருக்கிறார்கள்; ஒரு பெற்றோராக

எங்களது பொறுப்புகள் என்ன என்பதையும் ஒரு குழந்தைக்கான சரியான பயிற்சி என்ன என்பதையும் குறித்து நாங்கள் போதிக்கப்படவில்லை. ஒரு தாய் என்னிடம் கூறியதாவது: "எனது பிள்ளைகள் குழந்தைகளாக இருந்த போது, பணம் சம்பாதிப்பதையே நான் நோக்கமாகக் கொண்டிருந்தேன். இதைச் செய்ய நான் என் கணவரிடம் அடிமைப்பட்டிருந்தேன். கொஞ்சம் பணம் கிடைத்த போது, என்னுடைய பிள்ளைகளை சரியானபடி பயிற்றுவிக்கும் சந்தர்ப்பத்தை இழந்துவிட்டேன். அவர்களை வேறு மாதிரியாக பயிற்றுவித்திருந்தால், நடைமுறையில் நான் அவர்களை கொல்ல வேண்டியிருக்கும்." நாங்கள் கூறினதாவது: "ஆம், இந்த உண்மைகளின் அடிப்படையில், நாம் குழந்தைகள் மேல் அக்கறையுள்ளவர்களாக இருந்து அவர்களை சரியான நிலைமைக்கு கொண்டு வருவதற்கு பலவந்தம் பண்ணாமல் உதாரணம் மற்றும் கட்டளையினால் முயற்சி செய்ய வேண்டும்." நீ உன்னுடைய கருத்தை அவர்களிடம் பலவந்தப்படுத்த முயற்சித்தால், அவர்களை எதிர்க்கிறவர்களாக்கும்படி செய்யும்.

அவள் சொன்ன ஒரு செய்தி, அவள் திருமணத்திற்கு பிடிவாதமாக எதிர்ப்பு தெரிவித்தது, நாங்கள் அவளிடம் கூறினதாவது: இது அவர்களை எதிர்ப்பின் உச்ச நிலைக்கு கொண்டு செல்வதாக இருக்கும். அவர்கள் ஆண் / பெண் நண்பர்களைப் பெற அனுமதித்து தனது புத்திமதி முதலானவைகளை கேட்க தம்மிடம் வரும்படி செய்திருக்கலாம். ஆனால் அதை அவள் செய்யவில்லை. அதன் பலன் ஒரு மகள் ஒரு மனிதனை திருமணம் செய்து பிறகு அவன் சிறைக்குச் சென்றான். பிறகு அவள் சாதாரண படிப்பை எடுத்து படித்து மற்றவர்களுடன் வேலை செய்து கொண்டிருக்கிறாள்.

### எல்லாவற்றையும் சோதித்துப்பார்த்தல்

**கேள்வி:** "எல்லாவற்றையும் சோதித்து பார்த்து நலமானதைப் பிடித்துக் கொள்ளுங்கள்" என்கிற இந்த வசனத்தில் அப்போஸ்தலர் எதை அர்த்தப்படுத்துகிறார் என்பதை தயவுகூர்ந்து விளக்க முடியுமா? (1தெசலோனிக்கேயர் 5:21)

**பதில் :** எல்லாவற்றையும் சோதித்துப்பார்த்தல் என்பது அவைகளை சோதனை செய்து பார்க்க வேண்டும் என்று குறிப்பிடுகிறது. இந்த வார்த்தைகளை எல்லா காரியங்களிலும் நாம் பரந்த அளவில் எடுத்துக்கொள்ளக்கூடாது, அது அபத்தமாக இருக்கும். நாம் பரந்த அளவில் எல்லாவற்றையும் சோதனை செய்ய நமக்கு நேரம் இருக்காது. உதாரணத்திற்கு விளம்பரம் பண்ணும் உணவுகள், சிற்றுண்டி முதலியவைகளை சோதித்துபார்க்க நமக்கு நேரம் இல்லை. அப்படி செய்வது ஞானமாகவும் இருக்காது. இது அப்போஸ்தலருடைய நோக்கமல்ல. பிறகு அவர் எதை அர்த்தப்படுத்துகிறார்? வேத வாக்கியங்களில் சோதித்துப் பார்க்கச் சொல்லுகிறதா? இல்லை. ஏனெனில் அவர் இதை எழுதின சமயத்தில் வேத வாக்கியங்கள் ஏற்படுத்தப்படவில்லை. பழைய ஏற்பாட்டின் பல்வேறு புத்தகங்கள் அந்த கால சபையினர் ஏற்றுக்கொள்ளப்படாத நிலையில் இருந்தன. காரியங்களை சோதித்துப்பார்ப்பதற்கு வேத வாக்கியங்களைக் காட்டிலும் நன்கு வழி நடத்த அல்லது திட்ட அளவு வேறு எதுவும் நமக்குத் தெரியாது. ஆனால் எங்களைப் பொறுத்தவரை அப்போஸ்தலர் இது எதையும் மனதில் வைத்திருக்க மாட்டார் என்று நம்புகிறோம். உங்களது அறிவை, தீர்மானத்தை எல்லா காரியத்தைக் குறித்தும் பயன்படுத்த வேண்டும் என்று அவர் கூறுவதாக தெரிகிறது.

கர்த்தர் தம்முடைய பிள்ளைகளை ஒரு குதிரையை ஒரு கடிவாளத்தினாலும், ஒரு கப்பலை சுக்கானாலும் வழி நடதுவது போல வழி நடத்த விரும்பவில்லை. அவர்கள் வேத வாக்கியங்கள் மூலமாக மாத்திரமல்ல, வாழ்க்கையில் அவர்களது அனுபவம் மற்றும் அவருடைய கிருபையின் மூலமாக தீர்மானிக்க, முடிவெடுக்க வேண்டும் என்று கூறுகிறார். நமது அனுதின வாழ்க்கையின் மூலம் தேவனைப் பற்றிய சில பாடங்களை நாம் கற்று வருகிறோம் அல்லது நாம் அப்படி செய்ய வேண்டும். சில நடத்தைகள் தீமை பயக்கும் என்பதை அறிந்தால் இந்த அனுபவம் மூலமாக நாம் அனுகூலம் அடைய வேண்டும். நாம் தவறு செய்தால் கூட அதன் மூலமாகவும் கூட நாம் அனுகூலம் அடைய வேண்டும். நாம் சில ஆசீர்வாதங்களைப் பெற்றால் கூட அதன் மூலம் அனுகூலம் அடைய வேண்டும். நாம் செய்ய வேண்டும் என்று விரும்புகிற காரியங்களை செய்வது குறித்து நாம் ஊசலாடாமல் இயேசு கூறுவது போல நாம் "செல்லும் செலவை கணக்குப்" பார்க்க வேண்டும். வாழ்க்கையில் தேவ கிருபையினாலும் அனுபவம் மற்றும் தேவனுடைய வார்த்தையினாலும் தேவனுடைய சித்தத்தை அறியும்படி நாடுவதற்கு நாம் அறிவினால் வழி நடத்தப்பட வேண்டும். ஆகையால் அப்போஸ்தலரின் வார்த்தையை நமது புரிந்து கொள்ளுதலின்படி தேவனுடைய ஜனங்களை நியாயமானவர்களாக, அறிவுடைய ஜனங்களாக இருந்து அதை ஏற்றுக்கொண்டாலும் அல்லது நிராகரித்தாலும் அவர்களது சிறந்த தீர்ப்பை பயன்படுத்த வேண்டும்.

ஒரு விளக்கத்தை கொடுத்தல்: ஆதி சபைக்கு வந்திருந்தவர்களிடம் அவர்கள் வேதாகமத்தை பெறுவதற்கு முன்பு, வேத வாக்கியங்களை பெறுவதற்கு முன்பு அவர்களிடம் யாராவது, "உங்கள் தேவன் அவரது சிருஷ்டிகளில் ஆயிரம் பேர்களில் தொள்ளாயிரத்து தொண்ணூற்று ஒன்பது பேரை நித்திய ஆக்கினையில் போட நோக்கங்கொண்டிருந்தார். இது தேவனுடைய வெளிப்படுத்துதல்" என்று கூறியிருக்கிறார்கள் என்று வைத்துக்கொள்ளுவோம்.

இந்த நபர் அப்படிப்பட்ட போதனைகளை மறுத்து, தேவனைப் பற்றி சபை அறிந்திருந்ததற்கு மாறாக இருக்கிறது என்று கூற வேண்டும்.

யாராவது இன்னொருவரின் குணலட்சணத்தைப் பற்றி தரக்குறைவாக நம்மிடம் கூறினால் வேத வாக்கியங்களின் முறைமையின்படி நிரூபிக்கப்பட்டால் ஒழிய அதை மறுதலித்து கேட்க மறுக்க வேண்டும். இது குறித்து நாம் காலத்தை வீணாகக் கூடாது. அது நம்மீது திணிக்கப்படும் வரை நாம் தரக்குறைவானது எதுவும் இல்லை என்று நம்ப வேண்டும். சொல்லப்படுகிறதை எல்லாம் சரியானபடி ஆராயாமல் தேவனுடைய பிள்ளைகள் ஏற்றுக்கொள்ளக்கூடாது. வேதவாக்கியங்கள் மூலமாக ஆதரிக்கப்படுகிறவைகளை நல்ல தீர்ப்பை பயன்படுத்தி நாம் கேள்விப்படுகிறவைகளை நாம் சோதிக்க வேண்டும். முடிவாக அவர்கள் கேள்விப்படுகிறவைகளை தெய்வீக வார்த்தைகளினால் சோதிக்கும் போது, பரிசுத்த ஆவிக்கு இசைவாயிருக்கிற அனைத்தையும் நாம் பற்றிக் கொள்ள வேண்டும்; இந்த சோதனைக்கு நிற்காத எதையும் நாம் உடனே நிராகரிக்க வேண்டும்.

**கேள்வி :** "ஜாதி ஜாதிக்குத் தீமை பரப்பும், பூமியின் எல்லைகளிலிருந்து மகா புசல் எழும்பும் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்." (எரேமியா 25:32) இந்த வேத வசனத்தின் பொருளை நம்மிடம் கேட்கிறார்.

**பதில் :** எல்லை என்ற வார்த்தையை பொதுவாக நாம் வெளிபாகங்களை குறிப்பதாக நாம் புரிந்துகொள்கிறோம். அது சொல்லர்த்தமாக புரிந்துகொள்ளப்பட வேண்டும். இன்னொரு யோசனை என்னவென்றால் சமுத்திரத்திற்கு அருகேயுள்ள "சமூகத்தின்" பகுதியை குறிக்கலாம். சமுத்திரம் என்பது "சமூகத்தை" ஊடுருவ தயாராக இருக்கக்கூடிய திரளானவர்களைக் குறிக்கலாம். ஆகையால் அது சமூகத்தை ஆக்கிரமித்துக் கொண்டிருக்கும் ஒழுங்கற்ற சக்தியை குறிப்பிடலாம் என்று நாங்கள் கூறுகிறோம்.

தற்போது கொஞ்ச காலத்துக்கு முன்பு இருந்ததைக் காட்டிலும் நாடுகளுக்கிடையேயான தகவல் தொடர்பு மிகவும் எளிமையான காரியமாக இருக்கிறது. பொதுவாக ஒருவரையொருவர் சார்ந்திருக்கும்படி நடைமுறையில் ஒருங்கிணைக்கும்படி கர்த்தர் ராஜ்யத்தை சேர்த்தே கொண்டு வருகிறார். ஒரு பகுதி பாதிப்படையும் போது மற்ற பகுதியிலும் பாதிப்பை ஏற்படுத்துகிறது. சில காலத்திற்கு முன்பு ஒரு பேங்கின் தோல்வி இன்னொரு பகுதியில் உள்ள ஒரு பேங்க்கை பாதிக்காமல் இருந்தது. இந்த யுக முடிவில் வரவேண்டிய மகா கண்டுபிடிப்புகள் அதி சீக்கிர தகவல் தொடர்பையும் தேசங்களின் அறிவொளியையும் ஏற்படுத்த உதவுகின்றன.

**கேள்வி:** ஏன் அப்போஸ்தலர் பவுல், விசுவாசம், நம்பிக்கை மற்றும் அன்பை கிறிஸ்தவ கிருபைகளுடன் ஒன்று சேர்க்கிறார்?

பதில்: விசுவாசம், நம்பிக்கை மற்றும் அன்பு கிறிஸ்தவ கிருபைகளோடு சரியானபடி இணைக்கப்படுகிறது. சபையானது அன்பின் ஆவியில் பங்கு பெறுவதற்கு முன்பே கூட விசுவாசத்தை பெற்றிருந்தது என்பதை அப்போஸ்தலர் மனதில் கொண்டிருக்கலாம் என்று நாங்கள் சுட்டிக் காட்டுகிறோம். பின்னர் “விசுவாச கிரியை” என்பது, வெறும் விசுவாசக் கிரியையாக இராமல் “அன்பின் பிரயாசமாக” ஆகிறது. அவர்கள் “நம்பிக்கையின் பொறுமையையும்” பெற்றிருந்தார்கள். அவர்கள் தங்களது பரிசை உடனே பெறவில்லை. ஆனால் அவர்கள் தொடர்ந்து சென்று தங்களது பரிசுக்காக காத்திருந்தார்கள். ஆனால் அவர்கள் தொடர்ந்து செல்ல நம்பிக்கையின் பொறுமை அவசியமாக இருந்தது. கர்த்தரின் வாக்குத்தத்தத்தின் நிறைவேறுதலில் விசுவாசத்தின் கிரியையும் அன்பின் பிரயாசமும் அவைகளின் பரிசை சந்திக்கும் வரை தொடர்வது அவசியமாக இருக்கிறது. இவையெல்லாம் எல்லா வழிகளிலும் இணைக்கப் -பட்டிருப்பதை நாம் நிச்சயமாக ஏற்றுக்கொள்ளலாம்.

**கேள்வி:** “கிறிஸ்து இயேசுவுக்குள் நம்மைத் தமது நித்திய மகிமைக்கு அழைத்தவராயிருக்கிற சகல கிருபையும் பொருந்திய தேவன் தாமே கொஞ்ச காலம் பாடனுபவிக்கிற உங்களைச் சீர்ப்படுத்தி, ஸ்திரப்படுத்தி, பலப்படுத்தி நிலை நிறுத்துவராக.” (1பேதுரு 5:16) இந்த வசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பூரண நிலைமையை நாம் எப்பொழுதும் அடைவோம்?

**பதில்:** அவருடைய பிள்ளைகள் பாடுகளினால் பூரணப்படுத்தப்பட்ட பின்பு தேவன் அவர்களை சீர்படுத்தி, ஸ்திரப்படுத்தி, பலப்படுத்தி நிறைநிறுத்துவார் என்று நாம் நினைக்கும்படி வசனத்தின் அமைப்பு நம்மை வழிநடத்துகிறது என்று நாங்கள் நினைக்கிறோம். நாம் அனைவரின் கிறிஸ்தவ அனுபவங்களிலும் இந்த பாடுகள் கொஞ்ச காலம் எடுத்துக்கொள்ளும். நாம் கொஞ்ச காலம் பாடு அனுபவித்த பிறகு, நாம் பாடு இல்லாத இடம் கிடைக்கும் என்பது இதற்கு அர்த்தமல்ல. மிகவும் உயர்ந்த கிறிஸ்தவர்கள் முன்னேறுவதற்கு ஏற்ப பாடுகளை அனுபவித்தார்கள். நம்முடைய கர்த்தருடனும் இப்படியே இருந்தது. அவர் தமது வாழ்க்கையின் கடைசி பகுதியில் பெரும்பாலும் பாடுகளையே அனுபவித்தார். மொத்தத்தில் நாம் பூரண அன்பின் குறியீட்டை அடையும் வரை தொடர்ந்து முன்னேறும் வரை, இந்த பாடுகளால் நாம் பூரணப்படுத்தப்படுவோம். தற்கால வாழ்க்கையின் சகல அனுபவங்களிலும் பாடுகள் எடுத்துக்கொள்ளும் என்று நாங்கள் நினைக்கிறோம். நாம் கொஞ்ச காலம் பாடனுபவித்தப்பிறகு (இப்படியாக பூரணமாக்கப்பட்ட பிறகு) அவர் நம்மை “பலப்படுத்தி, ஸ்திரப்படுத்தி நிலைநிறுத்துவார்.” நாம் உயிர்த்தெழுதலின் மாற்றத்தை அடையும்வரை நாம் பூரணம் அடைய மாட்டோம் என்பதை நாம் அனைவரும் ஒத்துக்கொள்ளுகிறோம்.

**கேள்வி :** ஏன் ஒரு ஆடு நமது கர்த்தரை அடையாளப்படுத்த பயன்படுத்தப்பட வேண்டும்?

**பதில் :** சில எடுத்துக்காட்டுகளில் நமது கர்த்தர், அவரது குணலட்சணத்தை குறித்து சிங்கத்திற்கு ஒப்பிடப்படுகிறார். அவர் யூதா கோத்திரத்தின் சிங்கமாக, அந்த கோத்திரத்தின் பலமுள்ளவராக இருக்கிறார். சிங்கத்தின் அனைத்து விதமான குணங்களையும் அவர் பெற்றிருந்தார் என்று முடிவுக்கு வரக்கூடாது. அவர் ஆட்டின் குணங்களாகிய சாந்தம், தயவு, சந்தேகப்படாதிருத்தல் ஆகியவற்றை வெளிப்படுத்தினார். இந்த விதமாக ஆடு நமது ஆண்டவரை அடையாளப்படுத்தியது. “அவர் அடிக்கப்படும்படி கொண்டு போகப்படுகிற ஒரு ஆட்டுக்குட்டியைப் போலவும், தன்னை மயிர் கத்தரிக்கிறவனுக்கு முன்பாக சத்தமிடாதிருக்கிற ஆட்டைப்போலவும், அவர் தம்முடைய வாயைத் திறவாதிருந்தார்.” (ஏசாயா 53:7)

**கேள்வி:** “இதோ, தேவ ஆட்டுக்குட்டி.” இந்த சொற்றொடரை ஏன் யோவான் பயன்படுத்துகிறார்? இந்த சொற்றொடரில் இதோ என்கிற வார்த்தையின் கருத்து என்ன?

**பதில்:** யோவான் இந்த கூற்றை கூறியபோது, அதை கேட்டவர்களுக்கு ஆச்சரியத்தை கொடுத்திருக்கும் என்பதில் சந்தேகம் ஏதுமில்லை. அவர் என்ன பொருளில் கூறினார் என்பதை அவர்கள் அறிய முடியாதவர்களாக இருந்தார்கள். அவர் ஒரு தீர்க்கதரிசி என்றும், பெரிய தீர்க்கதரிசிகளில் ஒருவர் என்றும் நமது கர்த்தர் கூறினார். அவர் தீர்க்கதரிசனமாக பேசினார். கவனி, பார், இதோ என்ற வார்த்தைகள் உலகத்தின் பாவத்தை நீக்குகிற தேவ ஆட்டுக்குட்டியை குறிப்பிட்டன. எந்த பொருளில் இயேசு தேவ ஆட்டுக்குட்டியாக இருந்தார் என்பதை யோவான் அறியவில்லை. யூதர்கள் நிழலான பலிகளை வருடந்தோறும் செலுத்தி வந்தனர். ஆனால் அதன் அர்த்தம் என்ன என்பதைக் குறித்து சிறிய எண்ணம் கூட இல்லை. எந்த யூதனும் புரிந்து கொள்ளவில்லை. ஏனெனில் “அறிந்தார்களானால் மகிமையின் கர்த்தரை அவர்கள் சிலுவையில் அறைந்திருக்கமாட்டார்களே.”

“இதோ, தேவ ஆட்டுக்குட்டி” என்று இயேசுவைக் குறித்த ஒரு அறிவிப்பை யோவான் கொடுத்தபிறகு, அவரது சீஷர்களில் இரண்டு பேர் இயேசுவையும் அவர் எங்கே வாழ்ந்தார் என்பதையும் தேடி அவரது சீஷர்களானார்கள் என்று நாம் வேத வாக்கியங்களில் வாசிக்கிறோம். யோவான் சீர்திருத்தவாதியாக இருந்ததால் அவர்கள் அவருடனே இருந்தார்கள். யோவானை விட பெரியவர் இருக்கிறார், அவரது பாத ரட்சையின் வாரை அவிழ்ப்பதற்கும் அவர் பாத்திரன் அல்ல என்று யோவான் கூறியபொழுது, அப்படிப்பட்ட மகா பெரியவர் யார் என்பதைக் குறித்து அவர்கள் ஆச்சரியப்பட்டார்கள். ஆகையால் அதை அவர்கள் கவனத்தில் வைத்திருந்தார்கள். இந்த நற்பண்புகள் கொண்ட, அங்கீகரிக்கப்படாதவர், ஒப்பற்றவர் ஜனங்களின் பாவங்களை நீக்குகிறவர் யார் என்பதை அவர்கள் அறிய ஆரம்பித்தார்கள். அவைகள் யோவானுடைய வெறும் வார்த்தைகளாக இருந்தாலும், அவரை கர்த்தருடைய தீர்க்கதரிசியாக நம்பினார்கள். இயேசு தேவ ஆட்டுக்குட்டி, யோவானைக் காட்டிலும் பெரியவர். இந்த தகவலை அவர்கள் பெற்றவுடனேயே, யோவானை விட்டு, இயேசுவின் சீஷர்களானார்கள். யோவானின் மற்ற சீஷர்கள் இதை அதிகமாக உணர்ந்து கொள்ளாததால் யோவானுடனே இருந்தார்கள். ஒருவேளை யோவானின் மரணத்திற்கு பிறகு இவர்கள் இயேசுவின் சீஷர்களாகியிருப்பார்கள்.

அது வருடத்தின் பஸ்கா காலமாக, பஸ்கா ஆட்டை கொல்லும் காலமாக இருந்திருந்தால் யோவானின் வார்த்தைகளை பஸ்கா ஆட்டிற்கு ஒரு குறிப்பாக எடுத்துக்கொள்ளலாம். ஆனால் அது வருடத்தின் முடிவின் காலமாக, கர்த்தரின் பிறந்தநாளின் காலமாக அக்டோபர் மாதமாக இருந்தது. நமது கர்த்தரின் ஊழியம் மூன்றரை வருட காலப்பகுதி என்பதும், அவர் பஸ்கா சமயத்தில் சிலுவையிலறையப்பட்டார் என்பதும் அவர் தம்மை யோர்தானில் ஒப்புக்கொடுத்த போது அவர் முப்பது வயதுடையவராயிருந்தார் என்பதும் தெளிவான ரூபகாரம் உடையதாக இருக்கிறது.

**“ தேவனுடைய சுதந்தரர்”**

**கேள்வி :** “தேவனுடைய சுதந்தரர்” என்ற சொற்றொடருக்கு என்ன பொருள்?

**பதில் :** சுதந்தரர் என்ற வார்த்தையின் பயன்பாடு சாதாரணமாகவோ பொதுவாகவோ பயன்படுத்தப் படுவதில்லை. நாம் தேவனுடைய சுதந்தரரும் நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் உடன் சுதந்தருமாய் இருக்கிறோம் என்பது தேவன் நமக்கு பெரிய பரிசை வைத்திருக்கிறார் என்ற பொருளில் சொல்லப்பட்டிருக்கிறது. சாசனத்தின் மூலமாக இந்த பரிசை அவர் கொடுக்கவில்லை. சொத்துக்கள் பெரும்பாலும் சாசனம் அல்லது உயில் மூலமாக கொடுக்கப்படுகிறது. இந்த பரிசை பெறுவதற்கு மரண சாசனம் எழுதி வைத்தவர் மரிக்க வேண்டும்.

காப்பீட்டு திட்டத்தில், உயிர் காப்பீட்டுத் திட்டம் மற்றும் நன்கொடை திட்டம் என்று பல்வேறு திட்டங்கள் உள்ளன. இந்த காரியத்தில் தேவன் நமக்கு தெய்வீக சுபாவத்தையும் ராஜ்யத்தின் மகிமையையும் கொடுப்பதற்காக வைத்திருக்கிறார். முதலாவது, தனது குமாரன் குறிப்பிட்ட கீழ்ப்படிதலைக் காண்பித்தால் அவைகளை அவருக்கு கொடுப்பதாக வாக்குத்தத்தம் பண்ணினார். இந்த கீழ்ப்படிதலினால் தேவன் மிகவும் மேலாக அவரை உயர்த்தியிருக்கிறார். அவரது வாக்குத்தத்தத்தின்படி நாமும் மரணபரியந்தம் கீழ்ப்படிந்தால் நாமும் இந்த வாக்குத்தத்தத்தின் சுதந்தரராவோம்.

மற்ற விஷயத்தில், சாசனம் எழுதியவரின் மரணத்தைக் குறித்து பேசப்படுகிறது, இயேசு மானிட ஜீவனையும் உயிர்த்தெழுதலையும் கொடுப்பதற்காக வைத்திருக்கிறார். அவர் மனிதனாக இருக்கும் போது அவருக்கே இப்படிப்பட்ட ஜீவன் தேவைப்பட்டது. ஆனால் பிதாவினுடைய சித்தத்திற்கு கீழ்ப்படிந்து தமது மானிட ஜீவனைக் கொடுத்தார். இந்த சொத்தின் உயில் அல்லது சாசனம் எழுதுகிறவராக அதை செய்தார். நித்திய ஜீவனுக்கான இந்த உரிமைகள் சட்டப் பூர்வமாக அவருடையதாக இருந்தது. அதை அவர் பறிமுதல்செய்யப்படவோ, மாற்றப்படவோ இடங்கொடுக்காமல் அவைகளை பராமரித்தார். அவர் ஜீவனை கொடுக்கவோ அதை திரும்ப எடுத்துக்கொள்ளவோ அதிகாரம் இருக்கிறது என்று கூறினார்.

**R4753**

## REPLY TO CARDINAL GIBBONS’ SERMON

## கார்டினால் கிப்பன்ஸ் என்பவரின் பிரசங்கத்திற்கு பதில்

**[ஓவர்லேண்டு மந்த்லி (Overland monthly ) யிலிருந்து]**

கார்டினால் கிப்பன்ஸ் என்பவரின் பிரசங்கம் பரவலாக வெளியிடப்பட்டு புரட்டஸ்டண்ட் மற்றும் கத்தோலிக்க சபையினரால் பெரும் அளவில் கவரப்பட்டது. இதற்கு புரட்டஸ்டன்ட்டரின் மறுமொழி என்ன என்பது கேள்விக்குறியாக இருந்தது. உலகின் சிறந்த மற்றும் பிரபலமான புரட்டஸ்டன்ட் ஊழியர் மற்றும் நியூயார்க்கில் புரூக்ளின் கூடாரத்தின் பாஸ்டர் ரசல் அவர்களின் எழுத்துப்பூர்வமான பதில் சரியானதாகவும் போதுமானதாகவும் இருந்ததை நாங்கள் கேள்விப்படுகிறோம். அதை கீழே கொடுக்கிறோம்:–

**பாஸ்டர் ரசல் அவர்கள் கார்டினால் அவர்களுக்கு வாழ்த்து தெரிவிக்கிறார்**

“ஒன்றுபட்ட கிறிஸ்தவத்திற்கான ஒரு வேண்டுகோள்” என்பது பற்றிய கார்டினால் கிப்பன்ஸ் அவர்களின் பிரசங்கத்திற்கான பதிலை அளிக்கும் பொறுப்பு என் மேல் விழுந்திருக்கிறது. அதில் அவர் ஒரே ஒரு சபை மட்டுமே இருக்க வேண்டும். ஆகையால் எல்லா புரட்டஸ்டண்ட் சபையினரும் தங்களது சபை மனோபாவத்தை விட்டுவிட்டு ரோமன் கத்தோலிக்க சபையில் இணையும்படி மிகவும் கட்டாயப்படுத்தி வலியுறுத்துகிறார். பதிலளிப்பது என்மேல் விழுந்திருக்கிறது. ஏனெனில் நான் மற்ற புரட்டஸ்டண்ட் சபைகளிலிருந்து தனித்து இருக்கிறேன். மற்ற புரட்டஸ்டண்ட் பிரிவுகளின் சகல ஊழியக்கார சகோதரர்களுக்கு ஒரே சபை இருக்க வேண்டும் என்பதை அங்கீகரிப்பது விகாரமானதாகவும் கஷ்டமானதாவும் இருக்கிறது. அதே சமயத்தில் அவர்களது சபை பிரிவுகளும் வேறு எந்த சபைகளும் இல்லாமல் ஒரே ஒரு சபை மட்டுமே இருக்கும் என்பதை அங்கீகரிப்பது கஷ்டமானது.

இந்த காரியத்தை கனிவான நிதானத்துடன் கார்டினால் கிப்பன்ஸ் கையாண்டதற்காக நான் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன். கடந்த பயங்கரமான காலத்தில் ரோமன் கத்தோலிக்கர் ஒரு பக்கமும் பல்வேறு புரட்டஸ்டண்ட் சபைகள் இன்னொரு பக்கமாக இருந்து, தேவனுடைய நாமத்திலும் நமது இரட்சகரின் நாமத்திலும் நீதியின் பேரிலும் மறைமுகமான பரஸ்பரம் மரணம் வரை நாசம் ஏற்படுத்தும் சண்டைக்கு இது மிகவும் மாறானதாக இருக்கிறது. சகல அறிவுள்ள ஜனங்களுக்கும் தேவை என்னவென்றால் கடந்த காலத்தின் அறிவீனமான தப்பான எண்ணங்கள், பாசாங்குத்தனம் மற்றும் மூட நம்பிக்கைகளை விட்டுவிட்டு நசரேயனின் உண்மையான அடியார்களாக சேர்ந்து வர வேண்டும். இந்த திசையில் வரும் எல்லா கருத்துக்களும் அவை கார்டினால் கிப்பன்ஸ் வாயிலிருந்து வந்தாலும் வேறு யாரிடமிருந்து வந்தாலும் பாராட்டப்பட வேண்டும். நாம் அனைவரும் சத்தியத்தை விரும்ப வேண்டும். விரும்பி அதை தேவனுடைய வசனத்தில் தேட வேண்டும். ஆண்டவர் “ உமது வசனமே சத்தியம்” என்று கூறினார்.

**கார்டினால் கிப்பன்ஸ் கருத்துக்கு உடன்படுகிறேன்**

கார்டினால் கிப்பன்ஸ் விளக்கிய அனைத்து குறிப்புகளையும் நான் மனப்பூர்வமாக ஒப்புக்கொள்கிறேன் என்று கூறுவதில் நான் சந்தோஷம் அடைகிறேன். சபை பிரிவுகள் அனைத்தும் வேதவாக்கியங்களின் போதனைகளுக்கு எதிராக இருக்கின்றன. நான் பவுலைச் சேர்நதவன், நான் அப்பல்லோவைச் சேர்ந்தவன், பேதுருவைச் சேர்ந்தவன் முதலானவைகளை கூறிய பிரிவினையை வெளிப்படுத்திய கொரிந்து சகோதரர்களை பரிசுத்த பவுல் கண்டனம் செய்கிறார். அது மாம்சீக சிந்தையையும் ஆவியற்ற நிலைமையையும் நிரூபித்ததாக பரிசுத்த பவுல் இதற்கு பதிலளிக்கிறார். கடந்த சில வருடங்களாக சிலர் மதப்பிரிவுகள் நிச்சயமான அனுகூலத்தை பெற்றிருந்ததாகவும் இதை அனைவரும் ஏற்றுக்கொண்டால் அது தெய்வீக ஊழியத்தில் பெரும் வைராக்கியத்துக்கும் சக்திக்கும் வழி நடத்தியது என்றும் கத்தோலிக்க மற்றும் புரட்டஸ்டண்ட் கிறிஸ்தவர்கள் அனைவரும் உணருகிறார்கள்.

தேவன் முதலாவது ஒருங்கிணைந்த கிறிஸ்தவத்தையும், இரண்டாவதாக பிரிந்திருக்கிற கிறிஸ்தவத்தையும் அனுமதிக்க விருப்பங்கொண்டிருந்தார் என்று நான் கூறும் போது சரித்திரத்தில் பழக்கமுள்ளவர்கள் அனைவரும் புரிந்து கொள்ளுவார்கள். ஏனெனில் அநேக

நூற்றாண்டுகளாக ஐரோப்பாவில் ஒரே சபை, ரோமன் கத்தோலிக்க சபை மட்டுமே இருந்தது. அதன் பலன் எல்லாரும் விரும்பத்தக்கதாக இருக்கவில்லை. சபை ஐக்கியம், மத சார்பற்ற அல்லது மத கல்வியையோ அல்லது மனுக்குலத்தின் மகா விருப்பமாகிய உலகத்திற்கான ஆயிர வருட யுக வாக்குத்தத்தங்களையோ கொண்டு வரவில்லை. இன்னும் சரியாக கூறுவோமானால் அந்த நீண்ட காலப்பகுதியில் அறியாமையும் மூட நம்பிக்கையுமே வளர்ந்ததை நாம் காண்கிறோம். கடந்த சில நூற்றாண்டு காலப்பகுதியில் பல்வேறு சபை பிரிவுகளையும் கட்சிகளையும் பெறக்கூடிய சந்தர்ப்பத்தை பெற்றிருந்தோம். அதன் பலன் திருப்திகரமாக இல்லை. நாம் விரும்ப வேண்டும் மற்றும் எதிர்பார்க்க வேண்டும் என்று தேவனுடைய வார்த்தை வாக்குத்தத்தம் பண்ணின நிலையை பெறவில்லை. எனினும் இந்த பிளவுபட்ட நிலைமை அறியாமையிலிருந்தும் மூட நம்பிக்கையிலிருந்தும் சிந்திக்கும் சுதந்தரத்தையும் பெரிய விடுதலையையும் நிச்சயமாக பெற முடிந்தது.

ஆகையால் நாம் சபையைப் பற்றி சிந்திக்கும் போது "இருண்ட காலங்கள்" என்று அறியப்பட்ட கால சரித்திரத்தில் நிலவிய ஒற்றுமையை விரும்பக்கூடாது என்பதை கத்தோலிக்கரும் புரட்டஸ்டன்ட் சபையினரும் ஏற்றுக் கொள்ளுகிறார்கள். நாம் தேடுகிற மற்றும் ஜெபிக்கிற ஐக்கியம் அறிவொளியுடனான மற்றும் மிகவும் பரிசுத்தமாக்கப்பட்ட ஐக்கியமாகும். அது நாகரீகத்தின் வல்லமையின் கரம், தார்குச்சி முதலானவைகளால் பராமரிக்கப்பட வேண்டியிருக்காது. நமது ஜெபமும் விருப்பங்களும் "கிறிஸ்து உண்டாக்கின சுயாதீனம்," "தேவனுடைய பிள்ளைகளின் சுயாதீனம்" என்று வேதாகமத்தில் குறிப்பிடப்பட்ட சுயாதீனம் வரை செல்ல வேண்டும்.

### குழப்பமான கேள்வி

ஆகையால் சபைப்பிரிவு மற்றும் சச்சரவில் அதிருப்தியடைந்து, கடந்தகால பலவந்தமான இணைப்பிலும் அதிருப்தியடைந்து பிறகு எப்படி வேதாகமம் போதிக்கிற சபையின் ஐக்கியத்தை, சுயாதீனத்தை மற்றவர்களுக்கு அதை பராமரிக்கிறதும், சமாதானம் மற்றும் அன்பில் பிணைக்கப்பட்டிருக்கிறதுமான இந்த ஆவிக்குரிய ஐக்கியத்தை அடைவது என்று நாங்கள் கேட்கிறோம். எங்கே நாம் காண்போம்? எப்படி நாம் அடைவோம்? எந்த முறைமையின் மூலம் இந்த ஐக்கியத்தை நிறைவேற்றுவோம்?

நமது கர்த்தர் தம்மை ஒரே மந்தையின் ஒரே மேய்ப்பன் என்றும் ஒரே தொழுவத்தின் மேற்பார்வையாளர் என்றும் கூறிக்கொண்டார் என்று கார்டினால் குறிப்பிட்டிருந்ததை நாம் ஒப்புக்கொள்கிறோம். ஒரே ஒரு சபையே இருக்கிறது என்பதையும் அந்த சபைக்காக அவர் மரிக்கும் வேளையில் கூட, "அவர்கள் நம்மில் ஒன்றாயிருக்கவும் வேண்டிக்கொள்கிறேன்" என்று ஜெபித்ததையும் நாம் ஒத்துக்கொள்கிறோம். ஒரே சபையைப் பற்றியும், அது மானிட சரீரத்திற்கு ஒத்திருக்கிறது என்றும் அதற்கு மேல் ஒரே தலையும் அவர்கள் அனைவரும் அங்கங்களாக இருக்கிறார்கள் என்றும் அப்போஸ்தலர் கூறுகிறதையும் நாம் ஒத்துக்கொள்கிறோம். மேலும் அநேக சரீரங்கள் இல்லை, ஒரே சரீரம் இருக்கிறது என்பதையும், அநேக தலைகள் இல்லை, ஒரே தலை இருக்கிறது என்பதையும் ஒத்துக்கொள்ளுகிறோம். பிதாவானவர் திராட்சத் தோட்டக்காரர் என்பதையும் அதில் இயேசு திராட்சை செடியாகவும் உண்மையான அங்கங்கள் கொடிகளாக இருப்பதாகவும் நாம் ஒத்துக்கொள்கிறோம். மேலும் ஒரே கர்த்தர், ஒரே விசுவாசம், ஒரே ஞானஸ்நானம் இருப்பதையும் நாம் ஒத்துக்கொள்கிறோம்.

கார்டினால் கிப்பன்ஸ் மூலம் கொடுக்கப்பட்ட இந்த வேதாகம முன்னுரைகளை நாங்கள் ஒத்துக்கொள்ளுகிறோம். ஆனால் இந்த ஒரே சபை, சத்தியத்தின் பாறையின் மேல் கட்டப்படும் என்று கிறிஸ்துவினால் அறிவிக்கப்பட்டதும் ஜீவனுள்ள கற்களால் மகிமையான ஆலயமாக எழும்புகிறதும், அதில் பரிசுத்த பேதுரு ஒரு கல்லாக இருப்பதும் ரோமச் சபைதான் என்பதை நாங்கள் மறுக்கிறோம். அதே போல் பேப்டிஸ்ட் சபையாரும் அந்த ஒரே சபை பேப்டிஸ்ட் சபை என்று கூறுவதையும் நாங்கள் மறுக்கிறோம். அதே போல பிரிஸ்பட்டேரியன், மெத்தடிஸ்ட், லுத்தரன் மற்றும் காங்கிரிகேஷனல் சபைகள் ஆகியவை இதை மறுத்து தங்களது சபையே அந்த ஒரே சபை என்று கூறுகிறார்கள்.

பாவத்திலிருந்து திரும்பி, இயேசுவை தங்களது இரட்சகராகவும் மீட்பராகவும் ஏற்றுக்கொண்டு, இயேசு மூலமாக முழு அர்ப்பணத்தில் பிதாவானவரிடம் நெருங்கி தேவனுடைய பரிசுத்த ஆவியினால் ஜெனிப்பித்தலை பெறுகிறவர்கள் அனைவரும், அவர்கள் ரோமன் கத்தோலிக்க சபையிலோ, காங்கிரிகேஷனல், மெத்தடிஸ்ட், பேப்டிஸ்ட் அல்லது வேறு எந்த மானிட முறைமையிலும் சேர்ந்தாலும் அவர்கள் இயேசுவின் சகோதரர்களாகவும் பிதாவானவரின் பிள்ளைகளாகவும் இருக்கிறார்கள் என்பதே எங்களது வாதமாக இருக்கிறது. கத்தோலிக்க சபையோ அல்லது புரட்டஸ்டன்ட் சபையோ அல்லது இந்த மானிட முறைமைகளில் யாரும் வேதாகமத்தினாலோ, தேவனாலோ அங்கீகரிக்கப்பட்டவைகள் அல்ல என்பது எங்களது வாதமாக இருக்கிறது. அவைகள் அனைத்தும் மானிட ஸ்தானபனங்கள்; மனிதரால் ஆரம்பிக்கப்பட்டு, மனிதரால் பராமரிக்கப்படுகின்றன; அவர்களது ஸ்தாபனங்களை பராமரிப்பது சில சமயங்களில் நல்ல மனிதர்களாலும் சில சமயங்களில் கெட்ட மனிதர்களாலும் பராமரிக்கப்படுகின்றன.

உண்மையிலேயே இப்படி சீர்திருத்தப்பட்டு, அர்ப்பணம் செய்த விசுவாசி எந்த சபைப்பிரிவில் இருந்தாலும் அல்லது சகல சபைப்பிரிவுகள் மற்றும் விசுவாச கோட்பாட்டிலிருந்து வெளியே இருந்தாலும் அவன் தேவனுடைய பிள்ளைக்கு சமமாக இருக்கிறான் என்று கூறுகிறோம். பல்வேறு கிறிஸ்தவ சபைகளின் விசுவாச கோட்பாடுகள், தேவனையும் அவரது வார்த்தையின் வெளிச்சத்தையும் தேடுகிற நேர்மையான ஆத்துமாவுக்கு இடறுதலுக்குரியதாகவும் தடுக்கலின் கல்லாகவும் இருக்கின்றன என்பது எங்களது வாதமாக இருக்கிறது. அவை சில காரியங்களில் உதவியிருக்கிறது, அதே சமயத்தில் அநேக காரியங்களில் தீமை செய்திருக்கிறது என்பது உண்மை. இந்த ஸ்தாபனங்கள் அனைத்தும் தெய்வீக அதிகாரத்தை பெற்றிருக்கவில்லை. அவைகளில் எதுவும் தேவனுடைய வார்த்தையாகிய வேதாகமத்தினால் அனுமதிக்கப்படவில்லை. அவைகள் ஒவ்வொன்றும் தப்பறையான யூகங்கள் மேல் கட்டப்பட்டிருக்கிறது.

### எது உண்மையான சபை?

வேதாகமத்தின்படி உண்மையான சபை எது, எங்கே இருக்கிறது என்பதற்கான பதிலை நாம் அனைவரும் காணமுடியும். வேத வாக்கியங்களில் அது "பரலோகத்தில் பேரெழுதியிருக்கிற முதற்பேறானவர்களின் சபை" என்று விளக்கப்பட்டிருக்கிறது. (எபிரேயர் 12:23) நமது புரட்டஸ்டன்ட் நண்பர்கள், அவர்களது சபையின் அங்கங்கள் பரலோகத்தில் ஆட்டுக்குட்டியானவரின் ஜீவ புத்தகத்தில் எழுதப்பட்டிருக்கிறது என்று உரிமை கோர முடியுமா? இப்படிப்பட்ட உரிமை கோரலை வேறு எந்த சபையின்

நண்பர்களுக்கும் சொல்வதற்கு தைரியம் இருக்கிறதா? நிச்சயமாக இல்லை. கிறிஸ்தவத்தின் பல்வேறு பிரிவுகள் மற்றும் கட்சிகளில் கோதுமை மணிகளும் பதரும் சேர்ந்தே உள்ளன என்பதையும் மானிட தீர்ப்பின்படி பதர்கள்தான் அதிகம் இருக்கும் என்பதையும் நாம் அனைவரும் உணருகிறோம்.

தம்முடையவர்கள் யார் என்பதை கர்த்தர் அறிவார் என்று வேதவாக்கியங்கள் அறிவிக்கின்றன. எது உண்மையான ஆடு என்பதையும் எது ஆட்டுத்தோலை போர்த்துக் கொண்டிருக்கிறது என்பதையும் கர்த்தரைத் தவிர வேறு யாரும் அறியமாட்டார்கள் என்று வேதவாக்கியங்கள் அறிவிக்கின்றன. ஒருவரையொருவர் நாம் தீர்ப்பு செய்யக்கூடாது என்று அறிவுறுத்தப்படுகிறோம். "நீங்கள் குற்றவாளிகள் என்று தீர்க்கப்படாதபடிக்கு மற்றவர்களை குற்றவாளிகள் என்று தீர்க்காதிருங்கள்." ஒவ்வொரு இருதயமும் தேவனுடன் தனது சொந்த ஐக்கியத்தை பெறும்படி அறிவுறுத்தப்படுகிறது. அது சமய குருக்கள் மூலமாகவோ அல்லது பாதிரிமார் அல்லது போப் மூலமாகவோ அல்ல, ஒவ்வொரு கொடியும் திராட்சச் செடியுடன் நன்கு இணைக்கப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு கிறிஸ்தவனும் உண்மைச் சபையின் ஒவ்வொரு அங்கமும் கிறிஸ்துவுடன் இணைக்கப்பட்டிருக்க வேண்டும்.

தம்மில் இருக்கும் ஒவ்வொரு கொடியும் அன்பில் ஆவியின் கனிகளை கொடுக்கவில்லை என்றால், பிதாவானவர் அது அங்கமாக இருப்பதிலிருந்து நீக்கிப்போடுவார் என்று நமது கர்த்தர் உவமையில் அறிவிக்கிறார். இப்படியாக தெய்வீக ஞானம் மற்றும் அறிவின் நிலைப்பாட்டிலிருந்து, பூமியிலுள்ள கிறிஸ்துவின் சபையானது பரிசுத்தவான்கள் மட்டுமே அடங்கியதாக இருக்கிறது; பாவத்தை விட்டு ஓடினவர்கள், மீட்பரில் விசுவாசத்தை வைத்திருப்பவர்கள், தெய்வீக ஊழியத்திற்காக தமது வாழ்க்கையை மரண பரியந்தமும் அர்ப்பணித்திருக்கிறவர்கள் மற்றும் இந்த நிலைத்திருத்தலை பராமரித்து, நீதியின் கனிகளை கொண்டு வருகிறவர்கள் அடங்கியதாக இருக்கிது.

ஆகையால் தன்னை தனிப்பட்ட முறையில் அடையாளப்படுத்த முயற்சிக்காத திராட்சை செடியின் கொடிகளாக இருப்பவர்கள் மிகச் சிலரே என்பதை நாம் நிச்சயமாக அறிவோம். பல்வேறு சபை பிரிவுகளில் பெயரளவான அங்கம் வைத்திருக்கிறவர்களில் ஒரு சிலரே இந்த பரிசுத்தவான்களின் வகுப்பில் இருப்பார்கள். அவர்கள் மட்டுமே "பரலோகத்தில் பேரேழுதப்பட்டிருக்கிற முதற்பேறானவர்களின் சபை" என்ற தெய்வீக அங்கீகாரத்தை பெற்றிருக்கிறார்கள். அவர்கள் மட்டுமே உண்மையான திராட்சை செடியில் கனி கொடுக்கும் திராட்சை கொடியாகவும், பரிசுத்த ஆவியினால் கட்டப்படுகிற தேவனுடைய ஆலயத்தின் ஜீவனுள்ள கற்களாகவும், ஆவியினால் ஜெனிப்பிக்கப்பட்ட கிறிஸ்துவின் சரீரத்தின் சுறுசுறுப்பான அங்கமாகவும் இருக்கிறார்கள்.

இதற்கு முடிவாக வேதவாக்கியங்கள் உறுதியாக கூறுவதாவது: "ஜீவனுக்கு போகிற வாசல் இடுக்கமும், வழி நெருக்கமுமாயிருக்கிறது; அதைக் கண்டுபிடிக்கிறவர்கள் சிலர்." மேலும் இந்த சலுகை பெற்றவர்களில் ஐசுவரியவான்கள் அநேகரில்லை, ஞானிகள் அநேகரில்லை, அவர்கள் இந்த உலகத்தின் தரித்திரராகவும் விசுவாசத்தில் ஐசுவரியவான்களாகவும் ராஜ்யத்தின் சுதந்தரராகவும் இருக்கிறார்கள் என்று வேத வாக்கியம் உறுதியாக கூறுகிறது. "ஒருவன் எனக்கு சீஷனாக இருக்க விரும்பினால், அவன் தன்னைத்தான் வெறுத்து, என்னைப் பின்பற்றக்கடவன்" என்றும் நான் இருக்கும் இடத்தில் அவனும் இருப்பான் என்றும், "பயப்படாதே, சிறுமந்தையே, உங்களுக்கு ராஜ்யத்தைக் கொடுக்க உங்கள் பிதா பிரியமாயிருக்கிறார்" என்றும் இயேசு கூறினது போல இந்த ராஜ்ய வகுப்பார் அனைவரும் அவருடைய அடிச்சுவடுகளை பின்பற்றுகிறவர்களாக இருக்க வேண்டும்.

### கிறிஸ்தவ ஒன்றியம் ஒருபோதும் இழந்ததில்லை

இந்த நிலைப்பாட்டிலிருந்து ரோமச் சபை மற்றும் புரட்டஸ்டண்ட் சபையின் திரளான ஜனங்கள் கிறிஸ்துவின் சபையாக ஒருபோதும் இருந்ததில்லை. இருக்கவும் இல்லை என்பதை நாங்கள் உணருகிறோம். அவர்கள் தங்களையே வஞ்சித்துக் கொள்ளுகிறார்கள். அவர்கள் கிறிஸ்துவுக்குள் ஆவியினால் ஜெனிப்பிக்கப்பட்ட புதுசிருஷ்டியாக இல்லாமல் இந்த உலகின் பிள்ளைகளாக இருக்கிறார்கள். அவர்கள் ஆலயத்தின் ஜீவனுள்ள கற்களாகவோ, மெய்யான திராட்சை செடியின் கொடிகளாகவோ, "சிறுமந்தையின்" அங்கங்களாகவோ இருக்கவில்லை. அவர்கள் நல்ல மத உணர்வும் வேதாகமத்தின் மாபெரும் போதனைகளை தவறாக புரிந்துகொண்ட நல்ல விருப்பமும் உடைய உலக ஜனங்களாக இருக்கிறார்கள். கிறிஸ்து இயேசுவுக்குள் பரிசுத்தமாக்கப்பட்டவர்கள் மட்டுமே பரிசுத்தவான்கள் என்று அழைக்கப்பட வேண்டும்.

இந்த பெரும்பான்மையான ஜனங்கள் சபையை ஒழுங்குப்படுத்துகிறேன் என்று லாட்ஜ்கள், பேங்க் முதலானவைகளை ஏற்படுத்தினார்கள். அது பதினெட்டு (இப்பொழுது பத்தொன்பது) நூற்றாண்டுகளுக்கு முன்பு தேவன் ஏற்படுத்திய மகா ஸ்தாபனத்திற்கு எதுவுமே செய்யவில்லை. அது அப்பொழுதிலிருந்து ஒரு பிரிவாக உலகத்தில் தொடர்ந்து இருக்கிறது.

உண்மையான சபையானது எப்பொழுதுமே பிரிந்ததே இல்லை. ஏனெனில அதில் ஒவ்வொரு அங்கமும் தலையாகிய கர்த்தரோடும் அவர் மூலமாக "சிறு மந்தையாகிய," "அவரது சரீரமாகிய சபையின் அங்கங்களோடும்" இணைந்திருக்கிறார்கள். இந்த ஒரே சபையினால் ஒரே கர்த்தர் இயேசு, ஒரே விசுவாசம், வாக்குத்தத்தத்தின் அவரது வார்த்தை, ஒரே ஞானஸ்நானம் என்பது எப்பொழுதுமே பராமரிக்கப்படுகிறது. ஞானஸ்நானம் என்பது, மரணம் வரை அர்ப்பணத்தை குறிக்கிறது. அவரோடு பாடுபட்டால், சீக்கிரத்தில் நாம் அவரோடு கூட ஆளுகை செய்வோம்.

### மறைக்கப்பட்ட இரகசியம்

இந்த சபையின் சரித்திரம் எங்கே இருக்கிறது என்று ஒரு சிலர் கேட்கலாம். "உலகம் அவரை அறியாதபடியினாலே நம்மையும் அறியவில்லை" என்று அப்போஸ்தலர் பேசிய மொழியிலேயே நாங்கள் பதிலளிக்கிறோம். இயேசுவின் காலத்தின் உலகம் மதவாதிகளின் உலகமாக இருந்தது. தேவன் அனுப்பிய இரட்சகரும் பெரிய போதகருமானவரை அவர்கள் சிலுவையிலறைந்ததை அறியாதிருந்தார்கள். அதே போல கடந்த காலம் முழுவதும் பல்வேறு முறைமைகளில் மாபெரும் மத போதகர்கள் "கிறிஸ்துவின் சரீர அங்கங்களை" யூதர்கள் சரீரத்தின் தலையை அங்கீகரியாததைப் போல அங்கீகரிக்கவில்லை.

இந்த கருத்தைத்தான் பரிசுத்த பவுல் வலியுறுத்தினார். சபையானது கிறிஸ்துவின் அங்கங்கள் என்பது மத உலகிற்கும் மதச் சார்பற்ற உலகிற்கு மறைக்கப்பட்ட இரகசியமாக இருந்தது என்கிற உண்மையை, தத்துவத்தை

அவர் அறிவித்தார். இது உலகிற்கு அவர்களது புரிதலுக்கும், கோட்பாடுகளுக்கும், தத்துவத்திற்கும் அப்பாற்பட்டதாக இருக்கிறது. கத்தோலிக்க சபையிலும் புரட்டஸ்டண்ட் சபையிலும் இருந்த மிகவும் பரிசுத்தமான குணலட்சணம் உடையவர்கள், இயேசுவைப் போல, பரிசுத்த ஸ்தேவானைப் போல, சகல அப்போஸ்தலர்களைப் போல தியாகிகளாக இருந்திருக்கிறார்கள். இடைப்பட்ட நூற்றாண்டுகளிலும் அனைத்து விசுவாசிகளும் "இருண்ட காலத்தில்" ஒரு சமயத்தில் நிலவிய வெளிப்புற ஐக்கியத்திலும் சிலர் இருந்திருக்கலாம்.

### உண்மையான சபையின் போலி

ஒரு குறிப்பிட்ட அளவுக்கு கத்தோலிக்க சபையும் புரட்டஸ்டண்ட் சபையும் உண்மையான சபையின் போலியாக இருக்கிறது என்று இப்போது நாம் கூறினால் இரக்கமில்லாமல் கூறுகிறோம் என்று யாரும் நினைக்க வேண்டாம். உண்மைச் சபையின் இந்த போலித்தனம் தெரிந்தோ அல்லது வேண்டுமென்றோ செய்யாமல், ஆவியினால் ஜெனிப்பிக்கப்பட்டவர்களின் கட்டுப்பாட்டிலோ பரலோக அறிவொளியின் கட்டுப்பாட்டிலோ இல்லாமல், புத்திசாலிகளின் கட்டுப்பாட்டில் தேவனுடைய வார்த்தையை தவறாக புரிந்து கொண்டு, தவறான விளக்கம் கொடுத்து, அவர்களது தவறான விளக்கங்களை பின்பற்றுகிறார்கள் என்று கூறுகிறோம்.

உதாரணத்திற்கு ரோமன் கத்தோலிக்க சபையை கவனியுங்கள். ரோமன் கத்தோலிக்க சபையை சார்ந்த ஒரு சாதாரண மனிதன், தான் சபையின் ஒரு அங்கம் என்பதை அறியாதிருக்கிறான். இதை கார்டினால் கிப்பன்ஸ் அவர்களோ அல்லது எந்த மத அதிகாரியோ மறுக்கமாட்டார்கள். சபை என்பது போப் மற்றும் மற்ற போதகர்கள் என்றும் பொது ஜனங்கள் சபையின் அங்கங்கள் அல்ல, "சபையின் பிள்ளைகள்" என்று அவர்களது வெளியரங்கமான போதனை இருக்கிறது.

இப்படியாக, "சிறுமந்தை" முதலான வார்த்தைக்கு கத்தோலிக்க சபை பொருத்தமாக இருக்கிறது. அவர்கள் இந்த வேத வாக்கியத்தை சபையினருக்கு பயன்படுத்தாமல் மத குருமார்களுக்கு மட்டுமே பயன்படுத்துகிறார்கள். இது போப்பு சபையின் மகா பெரிய தவறின் இரகசியமாக இருக்கிறது. அவர்களது சபை முறைமையில் உண்மைச்சபையின் போலித்தனத்தை பெற்றிருக்கிறார்கள். ஏனெனில் கர்த்தரின் உண்மையுள்ளவர்கள், "சிறுமந்தை," "பரலோகத்தில் பேரெழுத்தப்பட்டிருக்கிற தேவனுடைய சபை," கிறிஸ்துவுடன் அரசாளுவார்கள் என்றும் வேத வாக்கியங்கள் அறிவிக்கின்றன. ஆகையால் போப்பு சபை, அந்த வாக்குத்தத்தத்தின் பலத்தில், பூமியிலுள்ள ராஜ்யங்களின் மேல் பரலோக அதிகாரத்தையும் பூமிக்குரிய வல்லமையையும் பெற்றிருப்பதாக கூறிக்கொள்ளுகிறது. மேலும் இந்த தப்பறையான நியாயப்படுத்துதலை நடப்பிக்க போப்பு சபை முயற்சித்து, மெய்யான சபைக்கு போலியை ஏற்படுத்த முயற்சிக்கிறது. மேலும் அதன் செயல்பாடுகள் அநேக கடுமையான துயரங்களுக்கும் துன்புறுத்துதல்களுக்கும், போர்களுக்கும், கொந்தளிப்புகளுக்கும் வழிநடத்தியிருக்கிறது.

### பரிசுத்தவான்களின் உண்மையான ஆளுகை

போப்பு சபையானது உண்மையான சபையின் போலித்தனத்தையும், உண்மையான ஆளுகையின் போலித்தனத்தையும் பெற்றிருக்கிறது. இது குறித்து வேதாகமம் கூறுவது என்ன? வேதாகமம் கூறுவதாவது: அறியப்படாதவர்களின் உண்மைத்தன்மை, மனிதர்களால் அவமதிக்கப்பட்டு நிராகரிக்கப்பட்ட, கிறிஸ்துவின் அடிச்சுவடுகளை பின்பற்றுகிற பரிசுத்தவான்கள், கற்றல், சோதனை, அவர்களது கர்த்தராகிய கிறிஸ்துவின் ராஜ்யத்தில் ஆளுகையில் ஒரு பங்கை பெற தயாராகுதல் போன்றவை இருக்கின்றன.

பிதாவானவரால் முன்னறியப்பட்ட தெரிந்து கொள்ளப்பட்ட சபையின் முழு எண்ணிக்கையும் உலகத்திலிருந்து தெரிந்தெடுக்கப்பட்டு, முடிவாக மகிமைப்படுத்தப்படுவார்கள். பிறகு அவர்கள் சுதந்தரராக இருக்கப்போகும் ராஜ்யம் ஸ்தாபிக்கப்படும். கர்த்தாதி கர்த்தாவும் ராஜாதி ராஜாவுமாகிய அவர்களது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்கு உடன் சுதந்தரராயிருப்பார்கள். அவரது ராஜ்யம் உலகத்தை ஆளுகை செய்யும். துப்பாக்கிகள் அல்லது வாள்களினால் அல்ல, துன்புறுத்தும் கருவி அல்லது கழுமரத்தில் எரித்து துன்புறுத்துதல் மூலமாக அல்ல, பூமியின் காரியங்களில் முழு அதிகாரத்தை பெற்றிருக்கும் பரலோக சக்தியினால் ஆகும்.

### சபையின் பிள்ளைகள்

நமது கத்தோலிக்க நண்பர்கள் பெற்றிருப்பது வெறும் ஒரு நிழலை மட்டுமே. ஒரு தாய் மற்றும் சில பிள்ளைகள் என்று போலியாக கூறுகிறார்கள். வேத வாக்கியங்கள் கூறுகிறதாவது: புதிய முறைமையில், மனுக்குலத்தை உயர்த்தவும் ஆசீர்வதிக்கவும் கிறிஸ்து தமது அதிகாரத்தை எடுத்துக்கொண்டு அவரது மேசியாவின் ராஜ்யத்தை ஸ்தாபிக்கும் போது அவர் மணவாட்டியை, சபையை, "ஆட்டுக்குட்டியானவரின் மனைவியாகிய மணவாட்டியை" பெற்றிருப்பார். (வெளிப்படுத்துதல் 21:9) மேலும் பரலோக மணவாளனாகிய மகிமையடைந்த கிறிஸ்துவும் பரலோக மணவாட்டியாகிய மகிமையடைந்த சபையும் அடையாளபூர்வமாக பிள்ளைகளைப் பெறுவார்கள் என்று வேத வாக்கியங்கள் மேலும் குறிப்பிடுகின்றன. அதாவது ஆயிரம் வருட நீதியின் ஆளுகை முழுவதும் மகிமையடைந்த இயேசு நித்திய பிதாவாக, ராஜ்யத்தின் விதிமுறைகளை ஏற்றுக்கொள்ளுகிற அவரது சகல பிள்ளைகளுக்கும் ஆதாமுக்கும் நித்திய ஜீவனை கொடுப்பவராக இருப்பார். பிறகு சபையானது தாயாக அல்லது போஷிப்பவளாக, நீதியின் வழிகளில் மனுக்குலத்தை உயர்த்தவும் போதிக்கவும், அபிவிருத்தி பண்ணவும் கூடிய பொறுப்பாளராக இருக்கும். மேலும் நித்திய ஜீவனுக்கும் மானிட சுபாவத்தின் முழு பூரணத்திற்கும் தகுதியுள்ளவர்களாக நிரூபிக்கும் அநேகரை கொண்டு வரவும் செய்வார்கள். இந்த உயர்த்துதலை மறுக்கிறவர்களும் தேவனுடைய கிருபையை நிராகரிக்கிறவர்களும் இரண்டாம் மரணத்தில் அழிக்கப்படுவார்கள். அவர்களது அழிவு புத்தியற்ற மிருகங்களைப் போல இருக்கும் என்று பரிசுத்த பேதுரு நமக்கு சொல்லுகிறார். (2 பேதுரு 2:12)

### புரட்டஸ்டண்ட் சபையினரும் போலிகளா?

புரட்டஸ்டண்ட் சபையார், குருமார்கள் மட்டுமே சபை, ஜனங்கள் சபையின் பிள்ளைகளாக இருக்கிறார்கள் என்கிற ரோமச்சபையின் கருத்தை நிராகரித்தாலும், அநேக சபைப்பிரிவுகளில் இந்த நயவஞ்சகமான தப்பறையை சற்று வேறு வகையில் நாம் பார்க்கலாம். இது எபிகோபல் சபையில் உண்மையாக இருக்கிறது. அது ஒரு அரசாங்கத்தைப் போல குருமார்கள் கையில் ஒப்புக்கொடுத்து, சபை ஜனங்களை ஆவிக்குரிய காரியங்களை புரிந்துகொள்ள முடியாத குழந்தைகளாக கருதுகிறார்கள். மெத்தடிஸ்ட் எபிகோபல் சபையினர் இதே முறைமையே பின்பற்றுகின்றனர். பிரிஸ்பட்டேரியன் மற்றும் லுத்தரன் முறைமைகளும் கூட, மத மன்றங்களில் சபை ஜனங்களுக்கு அங்கீகாரம் கொடுத்தாலும் அவர்களும் கூட குருமார்களையும் சபை ஜனங்களையும் குறிப்பாக வேறுபடுத்துகிறார்கள். இந்த மத

மன்றம் கூட பொருளாதார யோசனைகள் மற்றும் சட்ட காரியங்களுக்காக செய்யப்படுகிறது.ஆனால் சபை ஜனங்கள் ஆவிக்குரிய காரியங்களில் சபை குருமார்களுக்கு சமமாக மதிக்கப்படுவதில்லை.

காங்கிரிகேஷனல், பேப்டிஸ்ட் மற்றும் சீஷத்துவ சபைகளில் சபை குருமார்களுக்கும் சபை ஜனங்களுக்கும் சமத்துவத்தை அங்கீகரித்து தேவனுடைய முழு சபையும் யாராயிருந்தாலும் ராஜரீக ஆசாரியராக இருக்கிறார்கள். எனினும் இந்த சபை அமைப்புகளில் ஆவிக்குரிய அதிகாரம் மற்றும் வல்லமைகள் அனைத்தும் குருமார்கள் கையிலேயே இருக்கிறது. இவைகளெல்லாம் சபை மன்றங்கள் மூலம் காங்கிரிசேஷனல் சபையில் நடத்தப்படுகிறது.

பேப்டிஸ்ட் சபையில் ஊழியர்கள், பேப்டிஸ்ட் ஊழியர் சங்கத்தில் இணைந்திருக்கிறார்கள். அந்த சங்கம், பெற்றோர்கள் பிள்ளைகளின் மேல் அதிகாரம் செலுத்துவது போல சபை ஜனங்கள் மேல் அதிகாரம் உடையதாக இருக்கிறது. அந்த சங்கமே யார் பாஸ்டராக அழைக்கப்படலாம் யார் அழைக்கப்படக்கூடாது என்பதையும் யாரை பாஸ்டராக நியமிக்கலாம், யாரை நியமிக்கக் கூடாது என்பதையும் முடிவு செய்யும். இப்படியாக அதே ஆவியே இவை எல்லாவற்றிலும் வெளிப்படுத்தப்படுகிறது. இதன் மூலம் இவை அனைத்தும் உண்மையான சபையிலிருந்தும் அதன் ஒழுங்குகளிலிருந்தும் வேறுபட்டிருக்கிறது. நீங்கள் அனைவரும் சகோதரர்கள், இயேசு ஒருவரே உங்கள் ஆண்டவராக இருக்கிறார். தேவனே உங்கள் ஒரே பிதாவாக அல்லது போப்பாக இருக்கிறார் என்பதே உண்மையான சபையின் ஆவிக்குரிய ஒழுங்கு முறையாக இருக்கின்றது.

### ராஜரீக ஆசாரியத்துவம் என்பது சபை பாகுபாடற்ற பரிசுத்தவான்களால் அமைக்கப்பட்டது

ராஜரீக ஆசாரியர்கள் என்பது சபை பாகுபாடு இல்லாமல் அவர்களது குருமார்கள் அல்லது சபை ஜனங்களிலிருந்தோ அல்லது வேறு எங்கேயோ காணப்படுகிற பரிசுத்தவான்கள் சேர்ந்ததாக இருக்கிறது என்றும் “கர்த்தர் தம்முடையவர்களை அறிவார்” என்றும் நாங்கள் சமர்ப்பித்திருக்கிற வேதத்தின் போதனைகளை கவனிக்க வேண்டும் என்று கார்டினால் கிப்பன்ஸ் அவர்களை கேட்டுக்கொள்கிறோம். இந்த ஒரே சபை பிரிக்க இயலாதென்றும் இந்த மெய்யான திராட்சை செடியின் தோட்டக்காரர் பரமபிதா என்றும், உண்மையான திராட்சைப் பழங்களை கொண்டு வந்தால் ஒழிய உண்மையான சபையின் அங்கங்களாக, அதன் கிளைகளாக இருக்க மாட்டார்கள் என்பதையும் கார்டினால் அவர்கள் கவனிக்கும்படி கேட்டுக்கொள்கிறோம்.

இந்த பரிசுத்தவான்களின் வகுப்பார் முன்னரே இயேசுவுடன் இணைக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதையும் பரிசுத்த பவுலால் குறிப்பிடப்பட்ட (2கொரிந்தியர் 11:2) கற்புள்ள கன்னிகையான சபை அதன் எண்ணிக்கை நிறைவடைய காத்துக்கொண்டிருக்கிறது என்பதையும் பரலோக மணவாளன் இரண்டாம் வருகையில் அவர்களை தம்முடன் மகிமையில் ஏற்றுக்கொள்வார் என்பதையும் கார்டினால் கவனிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறோம். முதலாம் உயிர்த்தெழுதலின் வல்லமையினால் ஒரு நிமிஷத்திலே, ஒரு இமைப்பொழுதிலே மறுரூபமாக்கப்பட்டு அவர்களது கர்த்தருடன் அவரைப் போலவே இருப்பார்கள். பிறகு வேத வாக்கியங்கள் அறிவிப்பது போல, ஆட்டுக்குட்டியானவரின் கலியாணம் வரும், “அவருடைய மனைவி தன்னை ஆயத்தம் பண்ணினாள்.” அதன்பிறகு சீக்கிரத்தில் மேசியாவின் ராஜ்யமும், நமது கர்த்தரால் குறிப்பிடப்பட்ட சீர்திருத்த காலமும் வரும். அப்பொழுது அவரது உண்மையுள்ளவர்கள் அவருடன் சிங்காசனத்தில் அமருவார்கள். ஜீவனை அளிப்பவர் மூலமாக ஆதாமின் இனத்தாருக்கு புதிய வாழ்வு கொடுப்பது ஆரம்பமாகும்.

உலக முழுவதிலும் பெரிய, வளமான மானிட நிறுவனங்கள் ஏறக்குறைய தேவனுடைய ராஜ்யத்தின் நகலைப் போல இருக்கின்றன. இவைகள் கூட பூமியின் திராட்சை செடி என்று வேதத்தில் அழைக்கப்படுகிது. இது பரலோக பிதாவினால் நடப்பட்ட திராட்சைச் செடிக்கு மாறானதாக இருக்கிறது. இந்த பூமியின் எந்த அளவுக்கு சபைகளுக்கு நன்மை செய்திருக்கிறது அல்லது தீமை செய்திருக்கிறது என்பதை கண்டுபிடிப்பது நமது வேலையல்ல. இதை கர்த்தர் ஏற்ற வேளையில் அறிவிப்பார். ஆனால் இந்த திராட்சை செடிகள் மூலமாக கோபம், பகைகள், வன்மம், பொறாமை, சண்டைகள், தீமையான மொழிகளை பேசுதல் முதலானவை உண்டாகின்றன. இவைகள் சீக்கிரத்தில் தேவனுடைய கோபாக்கினை என்னும் ஆலையிலே போடப்படும். இது உலகின் மேல் மகா ஆபத்தின் நாட்களை கொண்டு வரும் என்றும் எல்லாரும் அதை அடிவானத்தில் காண்பார்கள் என்றும், அது உலகம் இதுவரை கண்டிராத ஆபத்துக்காலமாக இருக்கும் என்றும் கர்த்தர் அறிவிக்கிறார். (தானியேல் 12:1; மத்தேயு 24:21)

R4756

## 1911 – நினைவுகூருதல் இராப்போஜனம்–1911

மீண்டுமாக நமது அருமை மீட்பர் சிலுவையில் அறையப்பட்டதற்கான ஆண்டு நிறைவு நாளினை நாம் நெருங்கிக்கொண்டிருக்கிறோம். மீண்டுமாகக் கடந்து வந்த வருடங்களானது நமக்குக் கற்பித்துத் தந்துள்ள படிப்பினையை நம்முடைய வாசகர்களுக்கு நினைவூட்டுகின்றோம். அதென்னவெனில் சில விவரிக்கப்படாத காரணங்களின் நிமித்தமாக, இந்த ஒரு குறிப்பிட்டக் காலப்பகுதியில் கர்த்தருடைய அர்ப்பணிக்கப்பட்ட ஜனங்கள் விசேஷித்த சோதனைகளையும், பரீட்சைகளையும் சந்திக்கின்றவர்களாய் காணப்படுகின்றனர். நமது கர்த்தருடைய துயரமான மற்றும் பாரமான வேளைக்கும், ஆரம்பகால சீஷர்கள் மத்தியிலான விசேஷித்த சோதனைகளுக்கு ஒத்தவைகளைச் சந்திக்கின்றவர்களாய் காணப்படுகின்றனர். தாம் சிலுவையில் அறையப்படப் போவதை முன்னறிந்தவராக, எருசலேமுக்குப் போவதற்குக் கொஞ்சம் முன்னதாக, கிறிஸ்து இது குறித்து அப்போஸ்தலர்களுக்கு விளக்கினார். அப்போது தான் தம்முடைய மாம்சத்தைப் புசித்து, தம்முடைய இரத்தத்தைப் பானம் பண்ணுகிறவர்கள் மாத்திரமே தங்களுக்குள் ஜீவனைப் பெற்றிருப்பார்கள் என்று அவர் கூறினார். அவருக்கு நெருக்கமான பின்னடியார்களில் அநேகர், இது கடினமான உபதேசம், யார் இதைக் கேட்பார்கள் என்று கூறி அது முதல் அவருடனே கூட நடவாமல் பின்வாங்கிப் போனார்கள். (யோவான் 6:60,66)

தாம் சீக்கிரத்தில் சிலுவையில் அறையப்படப்போவதைக் குறித்துப் பன்னிரண்டு பேரிடமும் இயேசு சொன்ன பிற்பாடு, “ஆண்டவரே, இது உமக்கு நேரிடக்கூடாதே, இது உமக்குச் சம்பவிப்பதில்லை” என்று பரிசுத்த பேதுரு கூறி, கடிந்து கொள்ளுதலைப் பெற்றுக்கொண்டார். இயேசுவோ திரும்பிப் பேதுருவைப் பார்த்து கூறியதாவது:“எனக்குப் பின்னாகப் போ, சாத்தானே, நீ எனக்கு இடறலாய் இருக்கிறாய்; தேவனுக்கு ஏற்றவைகளைச் சிந்தியாமல் மனுஷருக்கு ஏற்றவைகளைச் சிந்திக்கிறாய்.” (மத்தேயு 16:22,23) “உன்னுடைய ஆலோசனைகளும், கருத்துக்களும் தெய்வீகத் திட்டத்திற்கு புறம்பானவைகளாகக் காணப்படுகின்றன. மனுஷகுமாரன் தமது மகிமைக்குள் பிரவேசித்து, சபை மற்றும் உலகத்திற்கு இரட்சகராக தமக்கு நியமிக்கப்பட்டுள்ள வேலையினை நிறைவேற்றத்தக்கதாகப் பலியாகும்விதத்தில் பாடுபட வேண்டியது அவசியமாய் உள்ளது என்று இயேசு கூறினார்.

பின்னர் இறுதிக் கட்டத்தில் யூதாஸ் மீது வந்த விசேஷித்த சோதனையையும், பணத்தின் மீதான இவரது மோகமானது, எப்படிப் போதகரின் அடகத்திற்கு ஏதுவான அபிஷேகத்தை எதிர்ப்பதற்கு வழி நடத்தினது என்பதையும் பின்னர் 30 வெள்ளிக் காசுகளுக்கென்று போதகரை விற்றுப் போடுவதற்கு வழி நடத்தினது என்பதையும் பின்னர் முத்தத்தினால் அவரைக் காட்டிக் கொடுப்பதற்கு வழி நடத்தினது என்பதையும் நாம் நினைவுகூருகின்றோம். பின்னர் தங்கள் போதகர் கைது செய்யப்பட்டதினாலும், அவர் தாம் கைது செய்யப்படுவதற்கு விரும்பினார் என்பதினாலும் எப்படி சீஷர்கள் அனைவரும் குழப்பத்திற்குள்ளானார்கள் என்பதையும் "எல்லாரும் அவரை விட்டு ஓடிப்போனார்கள்" என்பதையும் நாம் நினைவுகூருகின்றோம். (மாற்கு 14:50) பின்னர் எப்படி பெருந்தன்மையுள்ள பரிசுத்த பேதுரு கடுமையான தவறினால் மேற்கொள்ளப்பட்டவராகி, தனது ஆண்டவரும் போதகருமானவரை மறுதலித்து சபிக்கவும் செய்தார் என்பதையும் நாம் நினைவு கூருகின்றோம்.

அநேகமாக இச்சோதனைக்கு இணையாக கர்த்தருடைய ஜனங்கள் மீது வருஷத்தினுடைய இந்தக் காலப்பகுதியில் வருமென நாம் கொஞ்சம் கற்பனைப் பண்ணுகின்றோம். கிறிஸ்துவினுடைய சரீரத்தின் அங்கத்தினர்கள் இந்தக் குறிப்பிட்டக் காலப்பகுதியில் விசுவாசத்திற்கான, கீழ்ப்படிதலுக்கான, உண்மைக்கான விசேஷித்த சோதனைகளை, விசேஷித்த பிரச்சனைகளை, பரீட்சைகளை பெற்றிருக்க வேண்டியது ஏற்றதாகவும் மற்றும் உண்மையாகவும் காணப்படுகின்றது.

## லெந்து அல்லது உபவாச காலங்கள்

மேற்கூறப்பட்ட கருத்துப்பற்றின எண்ணங்களானது நீண்ட காலத்திற்கு முன்னதாகவே மற்றவர்களுக்குத் தோன்றி, கர்த்தருடைய குடும்பத்திலுள்ள அர்ப்பணிக்கப்பட்டவர்கள் மத்தியில் விசேஷித்த உபவாசம் மற்றும் ஜெபத்திற்குமான காலங்களாகிய லெந்து நாட்களை நியமிப்பதற்கு வழி நடத்தியுள்ளது. இந்த உபவாசமானது பல நூற்றாண்டுகளாக ரோம சபையிலும், ஆங்கில சபையிலும், கிரேக்க சபையிலும் மற்றும் சில சபைகளிலும் ஆசரிக்கப்பட்டு வந்துள்ளது என்பது நிச்சயம்.

பெரும்பான்மையானவர்களின் விஷயத்தில் உபவாசமானது, வெறும் சம்பிரதாயமாகவும், வெளித்தோற்றமான ஆசரிப்பாகவும் இருதய உணர்வு இல்லாமலும் காணப்படுகின்றது. இது கர்த்தருக்கு பிரியமாக காணப்படாது என்றும் முற்காலங்களிலும், இப்பொழுதும் சிலர் சிறந்த நோக்கங்களுடனும் உபவாசம் இருந்துள்ளனர் மற்றும் இருக்கின்றனர் என்று நாம் நம்புகின்றோம். எவரையும் நியாயந்தீர்ப்பதோ, தனிப்பட்ட விதத்தில் குற்றப்படுத்துவதோ நமக்கடுத்த காரியமல்ல; எனினும் நாம் கூறியிருப்பதை அநேகர் ஒப்புக்கொள்வார்கள் என்பது நிச்சயம். இருதயத்தை ஆளுவதற்கு ஏதுவான எந்தச் சட்டங்களையோ அல்லது விதிகளையோ ஏற்படுத்துவது கூடாத காரியமாகும். எந்தச் சட்டத்தினாலும் / விதியினாலும் மாம்சத்தைத் தற்செயலாகக் கூட ஆள முடியாது.

இம்மாதிரியான விஷயங்களில், இவைகளுக்கு விதிகளையும், சட்டங்களையும் ஏற்படுத்துவதை நாம் அங்கீகரிப்பதில்லை, உணவு தொடர்புடைய விஷயத்தில் மிதமாய் இருக்க வேண்டுமென இருதயப்பூர்வமாய் விரும்புகின்ற அனைவருக்கும், யோசனைகள் கொடுக்கப்படுவது போதுமானதாய் இருக்கும். போதகர் கடந்து போன பிற்பாடு, தம்முடைய பின்னடியார்கள் உபவாசமிருக்க வேண்டுமென்ற போதகருடைய ஆலோசனையை நாம் பெற்றிருக்கின்றோம். இப்படியான உபவாசமிருந்து பல தருணங்களானது வேத வாக்கியங்களில் பதிவு செய்யப்பட்டுள்ளது மற்றும் இவைகள் கர்த்தருடைய பின்னடியார்களுக்கான ஏற்ற மாதிரிகளாகக் கருதப்படலாம். இந்த கர்த்தருடைய பின்னடியார்கள் உணவுகள் அல்லது பானங்கள் அல்லது மற்றப் பூமிக்குரிய சடங்குகள் விஷயத்தில் நியாயப்பிரமாணத்தின் கீழோ, கட்டளையின் கீழோ இருக்கிறவர்கள் அல்ல.

உபவாசத்தில் கொஞ்சம் சுய கட்டுப்பாட்டுடன் காணப்படுவது என்பது, நமக்கு சரீர விஷயத்திலும், ஆவிக்குரிய விஷயத்திலும், அதிலும் குறிப்பாக வருஷத்தினுடைய வசந்த காலத்தில் பயன் கொடுக்கின்றதாய் இருக்கும். குளிர்காலத்தினுடைய குளிரான பருவநிலைக்கு அவசியமாய்க் காணப்படும் பலமான ஆகாரங்களானது, கடுமையற்ற பருவநிலையின் போது அவசியமாய் இராது. அதிகப்படியாய் உணவு உட்கொள்ளப்படுவதே, பெரும்பான்மையான இளவேனிற் கால சுகவீனங்களுக்கான காரணமாய் ஐயத்திற்கிடமின்றி காணப்படுகின்றது. மேலும் இந்தச் சுகவீனங்களானது, கொஞ்சம் உபவாசம் இருக்கும் போது சுவையான மற்றும் பலமான உணவுகளை கட்டுப்படுத்தும் போது சுகமாகிவிடுகின்றது. அதிகப்படியான போஷாக்கின் நிமித்தமாகச் செரிமானம் தடைப்பண்ணப்படும் போது, மூளையானது மிகவும் மந்தமாகிப் போய், உயர் மன ஆற்றல்களை குறிப்பாக பரம மற்றும் ஆவிக்குரிய காரியங்கள் தொடர்புடையதான உயர் மன ஆற்றல்களை வலுவிழக்கச் செய்து விடுகின்றது.

இந்த யோசனைகளை, நாம் எவர்மேலும் ஒரு நுகத்தை அல்லது நியாயப்பிரமாணத்தை சுமத்த வேண்டுமென்ற நோக்கத்தில் இல்லாமல், மாறாக ஒவ்வொருவனும் தனது சொந்த மனசாட்சிக்கேற்ப உபவாசம் இருந்து, ஜெபம் பண்ணுவதற்கும் மற்றும் இந்த விஷயத்திலும், ஒவ்வொரு விஷயத்திலும் கர்த்தருடனான தனது உறவினுடைய அளவிற்கேற்ப ஆவிக்குரிய ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்ளவும் வேண்டும் என்று விரும்புகிறோம்.

## நினைவு கூருதலின் இராப்போஜனத்திற்கான தேதி

அநேக அருமையான கிறிஸ்தவ ஜனங்கள் நினைவுகூருதல் இராப்போஜனமானது, வாரந்தோறும், மாதந்தோறும், மாதத்திற்கு இரண்டு முறையோ மாதத்திற்கு மூன்று முறையோ ஆசாரிக்கப்பட வேண்டும் என்று கற்பனை செய்து கொள்வது போன்று, நமது கர்த்தர் எதுவும் குறிப்பிடவில்லை என்று நாம் ஏற்கெனவே குறிப்பிட்டிருக்கின்றோம். நினைவுகூருதலின் இராப்போஜனமானது, யூத ஏற்பாடு அனைத்தின்படி வருடாந்திர ஆசரிப்பாக, நிழலான பஸ்காவினிடத்தில் இடம்பெறும் ஆசரிப்பாக நிறுவப்பட்டது என்பது மிகவும் நிச்சயம். நிழலின் விஷயத்தில் தேதியின் காரியத்தில் திட்டவட்டம் காணப்பட்டது. இது நிஜத்தினுடைய ஆசாரிப்புத் தொடர்புடைய விஷயத்தில் அவசியமாய் இருக்க வேண்டியதில்லை. நிழலானது, நமது கர்த்தர் சிலுவையில் அறையப்பட வேண்டிய துல்லியமான தேதியினை விசேஷமாய்ச் சுட்டிக் காட்டுவதற்குரிய நோக்கத்தினை பெற்றிருந்தது. ஆகையால் யூதர்கள் விஷயத்தில் மிகுந்த துல்லியம் என்பது ஏற்றதாய் இருந்தது. இப்பொழுதோ இயேசுவின் மரணம் பற்றின உண்மையானது நடந்து முடிந்த காரியமாய் இருக்கின்றபடியால் தேதி மற்றும் வேளையின் துல்லியம் மிகுந்த அவசியமானதாய்க் காணப்படுகிறதில்லை.

ஆகையால் எப்பிஸ்கோபல் சபையினரும் கத்தோலிக்கர்களும் மற்றும் லுத்தரன்களும் நமது கர்த்தருடைய மரணத்திற்கும், உயிர்த்தெழுதலுக்குமான ஆண்டு நிறைவு நாளுக்கு அருகாமையிலுள்ள வெள்ளியையும், ஞாயிறையும் புனித வெள்ளி என்றும், ஈஸ்டர் ஞாயிறு என்றும் ஆசரிக்கும் வழக்கத்திற்கு மறுப்புத் தெரிவிப்பதற்கு எதுவுமில்லை. உண்மையில் இவர்களது வழக்கத்திற்கு ஆதரவாக சில விஷயங்கள் சொல்லப்படலாம். ஏனெனில் இவ்வழக்கமானது ஆண்டு நிறைவு நாளினை, அவ்வாரத்தினுடைய நாட்களுடன் பொருந்துகின்றதாய் இருக்கின்றது. எனினும் 30 வருடங்களுக்கும் மேலாக, இந்த நினைவு கூருதலை, அதன் துல்லியமான ஆண்டு நிறைவு நாள் என்று நாங்கள் அறிந்திருக்கிற தேதியில், யூதருடைய காலக்கணக்கீட்டு முறைப்படி, யூதருடைய நீசான் மாதத்தில் 14ஆம் தேதியினுடைய முந்தின மாலையில் ஆசரிக்கும் வழக்கத்தினை நாங்கள் பெற்றிருக்கிறோம். இந்த நீண்ட கால வழக்கத்தின் மாற்றத்தை சிலர் தெளிவாய்ப் பார்க்க முடியாதவர்களாய் இருப்பார்கள். சிலர் குழப்பமடைந்து, தாங்கள் தப்பறையை பின்பற்றுவதாக எண்ணுவார்கள். ஆகையால் யூதருடைய நாள்காட்டியின்படியான துல்லியமான தேதியே பின்பற்றப்பட வேண்டும் நாம் என்று அறிவுரைக் கூறுகின்றோம்.

இவ்வருஷத்திலே இளவேனிற் சம இரவு பகல் நாளைத் தொடரும் அமாவாசையானது, மார்ச் 30ஆம் தேதி நிகழ்கின்றதாய் இருக்கின்றது மற்றும் இதுவே யூதக்காலக்கணக்கீட்டின்படியான முதல் மாதத்தினுடைய முதலாம் நாளாய் இருக்கிறது. நமது கர்த்தர் முதலாம் மாதத்தினுடைய 14ஆம் தேதியன்று சிலுவையில் அறையப்பட்டிருக்க, இந்த வருடம் அந்நாளானது, ஏப்ரல் 12ஆம் தேதியாக இருக்கும். ஆனால் அவரது மரணத்திற்கான நினைவுகூருதலான இராப்போஜனமானது முந்தின நாள் மாலையன்று ஆசரிக்கப்படுகின்றதாய் இருக்கின்றது. மற்றும் நம்முடைய முந்தைய வழக்கத்தின்படி அனைவரும் ஒரே இருதயத்துடனும், ஒரே மனதுடனும் ஒன்றாய் மாபெரும் மீட்பருடைய மரணத்தினை ஏப்ரல் 11-ஆம் தேதியாகிய, செவ்வாய்கிழமையன்று, இரவில் 6 மணிக்குமேல் ஆசரிப்பதற்கு நாம் பரிந்துரைக்கின்றோம். இப்படியாக ஆசரித்தாலும் கூட அனைவராலும் ஒரே மணி நேரத்தில் ஆசரிக்க முடியாது; காரணம் நேரத்திலுள்ள வித்தியாசம ஆகும். எனினும் உலகமெங்கும் இவ்வாசரிப்பானது அதே வேளையில் தான் நடைபெறும். அனைவரும் இப்படி ஆசாரிப்பார்கள் என்ற இந்தப் பொதுவான ஐக்கியமும் கூட, இத்தருணத்திற்கே உரிய சந்தோஷம் மற்றும் பயபக்தியுடன் கூட சேருகின்றது. கர்த்தரை அன்புகூருகின்றவர்களும், மரணம் வரையிலுள்ள அவரது சித்தம் செய்வதற்கென முழுமையாய் அர்ப்பணம் செய்த அனைவரும், நமக்கு விலையேறப்பெற்றதாய் காணப்படுகின்ற இந்த ஆசரிப்பில் பங்கு கொள்ளும்படிக்கு நாம் பரிந்துரைக்கின்றோம்.

இது முதலாவதாக, நம் அருமை மீட்பர் தம் சபை சார்பாகவும், பூமியின் குடிகள் அனைத்தின் சார்பாகவும் செலுத்திய அவரது பலியினை நமக்கு நினைப்பூட்டுகின்றதாய் இருக்கின்றது. இரண்டாவதாக, அவருடைய அடிச்சுவடுகளில் நடப்பதற்கும், அவரோடு கூட பாடுபடுவதற்கும், அவருடைய பாத்திரத்தில் பானம் பண்ணுவதற்கும், மரணத்திற்குள்ளான அவரது ஞானஸ்நானத்திற்குள் ஞானஸ்நானம் பெறுவதற்கும் நாம் கர்த்தரிடத்தில் பண்ணியுள்ள வாக்குறுதியை நமக்கு நினைப்பூட்டுகின்றதாய் இருக்கின்றது. நினைவுகூரும் வண்ணமாக அப்பம் பிட்குதலும், பாத்திரத்தில் பானம் பண்ணுதலும் இவைகள் அடையாளப்படுத்துகின்ற நிஜங்களிலுள்ள நம்முடைய பங்கெடுத்தலைக்காட்டிலும் முக்கியத்துவம் குறைந்ததேயாகும் என்பது உண்மைதான். நம்முடைய மனங்களிலும், இருதயங்களிலும் நாம் இயேசுவினுடைய பிட்கப்பட்ட சரீரத்தைப் புசித்து, அவர் மூலமாய் நம்முடைய மாம்சத்தின் நீதிமானாக்கப்படுதலை தரிப்பிக்கப்பட்ட விதத்தில் நாம் பங்கெடுக்கின்றோம் என்றும், அவர் மூலமாகவே எதிர்கால ஜீவியத்திற்கான நம்முடைய நம்பிக்கைகள் அனைத்தும் வருகின்றது என்றும் விசுவாசத்தின் மூலம் உணர்ந்து கொள்ளப்பட வேண்டும்.

இரண்டாவதாக அவரது பாத்திரம் அடையாளப்படுத்துகின்றது போல், நாம் அவரது துயரங்களில் பங்கடைய வேண்டும். கிறிஸ்துவின் பாடுகளில் பங்கெடுப்பவர்களாகக் காணப்பட வேண்டும் மற்றும் அவரது அடிச்சுவடுகளில் மரணம் வரையிலுமாக உண்மையாய் நடந்து கிறிஸ்துவின் பாடுகளில் குறைவானதை நிறைவேற்ற வேண்டும். பிதா தமக்கு ஊற்றின பாத்திரத்தினை ஆண்டவர் பானம் பண்ணினார். தேவனுடைய கிருபையினால், அவர் பாத்திரத்தில் பங்கு பெறுவதற்கான சிலாக்கியத்தினை நாம் பெற்றிருக்கின்றோம். ஏனெனில் நாம் அவரோடு கூடப் பாடுபட்டால், அவரோடு கூட ஆளுகை செய்வோம். கிறிஸ்துவின் பாடுகளிலிருந்து நாம் விலகி ஓடிவிடுவோமானால், அவரோடு கூட ஜீவப்பலிகளாகுவதற்கு நாம் தவறுவோமானால், நாம் அவரது இராஜ்யத்தினுடைய மகிமையான சிலாக்கியங்களை அடைய முடியாது.

**R4757**

## LIFTED BY WHIRLWIND OUT OF SIGHT

## சுழற்காற்றினால் எடுத்துக்கொள்ளப்படுதல்

தீர்க்கதரிசி எலியாவின் அனுபவங்கள்

2 ராஜாக்கள் 2 : 1-11

"ஏனோக்கு தேவனோடே சஞ்சரித்துக் கொண்டிருக்கையில், காணப்படாமற் போனான்." ஆதியாகமம் 5:24

தேவன் எடுத்துக்கொண்ட, காணாமற்போன மூன்று குறிப்பிடத்தகுந்த மனிதர்களைப் பற்றி வேதாகமம் கூறுகிறது. இவர்களின் ஒருவர் ஏனோக்கு, மரிக்கவில்லை. அவர்களில் இன்னொருவர் மோசே, இவர் மரித்து அடக்கம் பண்ணப்பட்டார் என்று சொல்லப்பட்டோம். மூன்றாவது நபர் நமது பாடம் அவரைப்பற்றிதான். அவர் மரித்தாரா இல்லையா என்று சொல்லப்படவில்லை. ஆனால் நமது புரிந்து கொள்ளுதல் அவர் மரித்தார் என்பது.

சுழல் காற்றினால் எலியா எடுத்துக்கொள்ளப்பட்டது, பறவைகள் பறக்கிற வானத்துக்குத்தான். இந்த முறையில் அவர் எடுத்துக்கொள்ளப்பட்டது அவர் வாழ்க்கையில் நிழலான அம்சங்களை நிறைவேற்றவேயாகும். அதை நாம் பார்க்கப் போகிறோம். அவரோ அல்லது ஏனோக்கோ வானத்துக்கு செல்லவில்லை. அதாவது தேவனுடைய பிரசன்னத்துக்கோ, பரலோக அல்லது ஆவிக்குரிய நிலைமைக்குள் செல்லவில்லை என்பது "பரலோகத்திலிருந்து இறங்கின மனுஷ குமாரனேயல்லாமல் பரலோகத்திற்கு ஏறினவன் ஒருவனுமில்லை" என்று இயேசு அறிவித்ததின் மூலம் தெளிவாக நிரூபிக்கப்படுகிறது.

(யோவான் 3:13) ஏனோக்கு மரணத்தை காணாதபடி எடுத்துக் கொள்ளப்பட்டான் என்ற அறிவிக்கப்படுகிறதோ ஒழிய, பரலோகத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்டான் என்று சொல்லப்படவில்லை. நமது கர்த்தரின் வார்த்தைகள் அவன் பரலோகத்துக்கு எடுத்துக்கொள்ளப்படவிலலை என்பதை உறுதிப்படுத்துகிறது. அவர் இப்போது எங்கே இருக்கிறார் என்பது யாருக்கும் தெரியாது. விசுவாசத்தினால் நாம் அதை ஏற்றும் கொள்ளலாம்.

ஏனோக்கு எடுத்துக்கொள்ளப்பட்டதாக சொல்லப்படுவது, ஒருவேளை நமது இனத்தை எப்பொழுதும் உயிரோடு இருக்கும்படி செய்ய முடியும் என்பதை காண்பிப்பதற்காக இருக்கலாம். பாவத்தினிமித்தமே ஆதாமும் அவனது குடும்பமும மரிக்க வேண்டியுள்ளது. மேசியாவினால் தமது ராஜ்யத்தில் பாவமும் மரணமும் நீக்கப்படும் போது, விருப்பமும் கீழ்ப்படிதலும் உள்ள மனுக்குலத்தினர் மனித பூரணத்திற்கு கொண்டு வரப்பட்டு, மரிக்க வேண்டிய அவசியமிருக்காது. ஒரு அபூரண மனிதனாகிய ஏனோக்கு கடந்த ஐயாயிரம் வருடங்களாக தெய்வீக சக்தியால் பாதுகாக்கப்படுதல், மனுக்குலத்தின் மறு சீரமைக்கும் வேலை நடக்கும் போது, அவர்களுக்கான உதவிக்கான ஆதாரமாக இருக்கும். ஏனோக்கோ பழைய ஏற்பாட்டுக்கால விசுவாசிகளில் ஒருவராக இருக்கிறார். அவர் ஆயிர வருட யுகத்தில் மேசியாவின் கண்ணுக்கு தெரிந்த ராஜ்யத்தின் பூமிக்குரிய ஆளுனராக பிரபுக்களில் ஒருவராக இருப்பார். "உமது பிதாக்களுக்கு பதிலாக உமது குமாரர் இருப்பார்கள். அவர்களை பூமியெங்கும் பிரபுக்களாக வைப்பீர்." (சங்கீதம் 45:16)

### எலியா சபைக்கு ஒரு நிழல்

மெல்கிசேதேக் மகிமையில் உள்ள சபையை அடையாளப்படுத்துவது போல எலியா இயேசுவின் காலம் முதல் தற்காலம் வரை மாம்சத்தில் உள்ள சபையை, திரைக்கு இப்பக்கம் உள்ள சபையை அடையாளப்படுத்துவதை வேத மாணவர்கள் புரிந்து கொண்டிருக்கிறார்கள். இப்படியாக எலியாவின் மரணத்திற்கு நீண்ட காலத்திற்கு பிறகு, தீர்க்கதரிசி மூலமாக தேவன் இஸ்ரயேலுக்கு அறிவித்தாவது: இதோ கர்த்தருடைய பெரிதும் பயங்கரமுமான நாள் வருகிறதற்கு முன்னே நான் உங்களிடத்திற்கு எலியா தீர்க்கதரிசியை அனுப்புகிறேன். அவன் பிதாக்களுடைய இருதயத்தை பிள்ளைகளிடத்திற்கும், பிள்ளைகளுடைய இருதயத்தை பிதாக்களிடத்திற்கும் திருப்பாவிட்டால், பூமி சங்காரத்தால் அடிக்கப்படும், யாதொரு ஜாதியாரும் தோன்றினது முதல் அக்கால மட்டும் உண்டாயிராத ஆபத்துக் காலம் வரும். (மல்கியா 4:5,6) மாம்சத்தில் இருந்த இயேசுவின் முன்னோடியாகிய யோவான்ஸ்நானன், மகிமையான மேசியாவின் முன்னோடியாகிய இந்த மாபெரும் எலியாவை (மாம்சத்தில் இருக்கும் சபையை) அடையாளப்படுத்தினார். யோவான்ஸ்நானன் ஜனங்களை பிதாக்களுடன் (ஆபிரகாம், ஈசாக்கு. யாக்கோபு முதலானவர்கள்) நல்லிணக்கத்திற்கு கொண்டு வர முடியாததைப் போல மாம்சத்தில் இருக்கும் சபையும், தேவன் முன்னறிந்தது போல, உலகத்திற்கு சமாதானத்தை கொண்டு வருவதில் வெற்றியடையவில்லை.

யோவான்ஸ்நானனின் இஸ்யேலுடனான தோல்வியை தொடர்ந்து, அவர்களது தேசம் கிபி 70இல் கவிழ்க்கப்பட்டது போல, அவரது உண்மைப் பொருளான மாம்சத்தில் இருக்கும் சபையானது உலகத்தை நல்லிணக்கத்தையும் நீதியையும் கொண்டு வருவதில் தோல்வியடைந்ததால் அதைத் தொடர்ந்து உலகளாவிய ஆபத்து வரும். அது மனிதனை தாழ்மைப்படுத்தி, மேசியாவின் ராஜ்யம் அதிகாரத்திலும் மகிமையிலும் இருக்கும்படி அதை ஸ்தாபிக்கும், வழியை ஏற்படுத்தும்.

### சுழற்காற்றில் அகப்படுதல்

சபைக்காக தேவன் கொடுத்திருக்கிற பரலோக இரட்சிப்புக்கும் உலகத்திற்காக தேவன் வழங்குகிற பூமிக்குரிய இளைப்பாறுதலுக்கும் (அப்போஸ்தலர் 3:19-21) உள்ள வித்தியாசத்தை மாத்திரமல்ல, இரண்டு விதமான வகுப்பார் சபையில் இருக்கிறார்கள் என்று வேதாகமத்தில் சொல்லப்பட்டிருப்பதையும் அநேக கிறிஸ்தவர்கள் கவனிக்கவில்லை. முதலாவது, கிறிஸ்து தலையாக இருக்கும் "கிறிஸ்துவின் சரீரம்" என்ற அழைக்கப்படுகிற உண்மையுள்ள ராஜரீக ஆசாரியர்கள். இவர்கள் மேசியாவின் ராஜ்யத்தில் இயேசுவுடன் சிங்காசனத்தில் உட்கார்ந்து உலகத்தை நியாயந்தீர்ப்பார்கள் என்கிற வாக்குத்தத்தத்தை பெற்றிருக்கிறார்கள். ஆவிக்குரிய தளத்தில் இரட்சிக்கப்படும் இன்னொரு வகுப்பார், "ஒருவனும் எண்ணக்கூடாத திரள் கூட்டம்" என்று வேத வாக்கியங்கள் கூறுகின்றன. (வெளிப்படுத்தல் 7:9) இவர்கள் தெய்வீக முன்னறிவினால் தீர்மானிக்கப்பட்ட தெரிந்துகொள்ளப்பட்ட ஒருஇலட்சத்து நாற்பத்தி நாலாயிரம் பேரிலிருந்து வேறுபட்டவர்கள். அவர்கள் "சிறுமந்தை," "ராஜரீக ஆசாரியர்கள்" என்று அழைக்கப்படும் போது, வேதாகமம் இந்த "திரள் கூட்டத்தாரை" மெய்யான லேவியர்கள் என்று கூறுகிறது. தெரிந்து கொள்ளப்பட்டவர்கள் கிறிஸ்துவுடன் சிங்காசனத்தில் உட்காரும் பொழுது இரட்சிக்கப்பட்ட இந்த இரண்டாம் தர வகுப்பார் சிங்காசனத்திற்கு முன்பாக சேவிப்பார்கள். பரிசுத்தவான்களாகிய அந்த சிலர் மகிமையின் கிரீடங்களை அணியும் பொழுது, அவர்களது சகோதரர்களான இந்த திரள் கூட்டத்தார், கிரீடங்களை பெறாமல் சிங்காசனத்திற்கு முன்பாக வெற்றியின் குருத்தோலைகளை பெறுவார்கள். தெரிந்து கொள்ளப்பட்டவர்கள் "முதலாம் உயிர்த்தெழுதலில்" கொண்டு வரப்போகிற தேவனுடைய ஆலயத்திற்கு ஜீவனுள்ள கற்களாகவும் ஆயிர வருடங்களுக்கு தேவனும் மனிதனும் சந்திக்கும் இடமாகவும் இருப்பார்கள். ஆனால் இந்த லேவியரின் வகுப்பார், "திரள் கூட்டம்" இந்த ஆலயத்தில் ஜீவனுள்ள கற்களாகவோ அல்லது தூண்களாகவோ இல்லாமல் இந்த தேவனுடைய ஆலயத்தில் இரவும் பகலும் சேவிக்கக்கூடிய மகிமையான சந்தர்ப்பத்தை பெற்று ஆசீர்வதிக்கப்படுவார்கள்.

"தெரிந்து கொள்ளப்பட்ட" வகுப்பாருக்கு நிழலாக எலியாவை கண்டுபிடித்த பிறகு, வேத மாணவர்கள் எலிசாவையும் ஒரு நிழலான குணசித்திரமாக கவனிக்க விரும்புகிறார்கள். மெய்யான லேவியராகிய மாபெரும் ஆவிக்குரிய வகுப்பாரின் பிரதிநிதியாகிய கவனிக்க விரும்புகிறார்கள். எலியாவின் ஊழியம் முடியும் தறுவாயில் எலிசா அவரது ஊழியனாகவும் தோழனாகவும் ஆனார். அநேக சந்தர்ப்பங்களில் எலியா, எலிசாவிடம் இங்கே இரு என்று கூறியது. இங்கே சபையின் வழிப்பாதையில் வருகிற சோதனைகளையும் கஷ்டங்களையும் ஒரு வேளை குறிப்பிடலாம். இது எலிசா வகுப்பாராகிய "திரள் கூட்டத்தார்," எலியா வகுப்பாராகிய அதிக வைராக்கியமுள்ள அவர்களது சகோதரர்களை தொடர்ந்து செல்லக்கூடாது என்பதை குறிப்பிடலாம். இந்த பல்வேறு நிறுத்தங்களும் பரிந்துரைகளும் சலித்தல் அல்லது பிரித்தலை குறிப்பிடுகிறது. தொடர்ந்து இருக்கிற அனைவரும் எலிசா வகுப்பார் என்று புரிந்து கொள்ளப்படலாம். இரு வகுப்பாரிலும் எந்த விழுந்துபோகுதலும் இல்லை.

### அக்கினி ரதமும் குதிரை வீரரும்

எலியா ஒரு நிழலாக, இந்த விளக்கங்கள் சரியாக இருக்குமானால், மாம்சத்தில் இருக்கும் சபையின் முடிவு உடனே, திடீரென்று வரும் என்பது பாடமாக இருக்கிறது. அக்கினி ரதம் என்பது அக்கினி சோதனைகள் மற்றும் துன்பங்களையும், எலியா மற்றும் எலிசா வகுப்பார்களை பிரித்தலையும் உண்மையெனக் காட்டலாம். அடையாளமாக அல்லது நிழலாக எலியா பரலோகத்துக்கு எடுத்துச் சென்ற சுழற்காற்றானது வேத வாக்கியங்களில் ஒரே மாதிரி மாபெரும் குழப்பம் மற்றும் சண்டையை, ஒரு புயலை குறிக்கிறது.

எலியா வகுப்பார் அல்லது தீர்க்கதரிசிகளின் புத்திரர் மூலமாக இந்த முடிவு முழுவதுமாக எதிர்பாராததாக இருக்காது. தீர்க்கதரிசிகளின் புத்திரரானவர்கள் வேதமாணவர்களின் மரியாதைக்குரிய வகுப்பாராக இருப்பார்கள். அவர்கள் தங்களை முழுமையாக தேவனுக்கு அர்ப்பணிக்கவில்லை. அவர்கள் எலியா அல்லது எலிசா வகுப்பாரின் பரலோக நிலைமைக்குரிய அங்கங்களாவதற்கு தகுதியுள்ளவர்களாக இருக்கமாட்டார்கள்.

R4757

# ELISHA SUCCESSOR OF ELIJAH
## எலிசா எலியாவின் வாரிசு

2 ராஜாக்கள் 4 :25-37

"தேவனுடைய கிருபை வரமே நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினால் உண்டாகும் நித்திய ஜீவன்." ரோமர் 6:23

கடந்த வார பாடத்தை தொடர்ந்து இந்த பாடம் வருகிறது. எலியாவை சுழற்காற்று பிரித்து எடுத்துக்கொள்ளப்படும் வரை எலிசா அவர் கூட இருந்தார். எலியாவின் சால்வை எலிசாவின் மேல் விழுந்தது. எலிசாவின் வேண்டுதல் கேட்கப்பட்டு, எலியாவின் ஆவியில் இரட்டிப்பான அளவு எலிசாவுக்கு கொடுக்கப்பட்டது. எலிசா, எலியாவை ஒரு போதகனாக ஏற்றுக்கொண்டு எலியாவின் வேலையை எடுத்துக்கொண்டார். எலிசா சால்வையை யோர்தான் நதியில் அடித்த போது, எலியாவுக்கு நிகழ்ந்த அதே அற்புதம் நிகழ்ந்தது. அவர் அதை பாதுகாப்பாக கடந்தார். யோர்தானின மறுபக்கத்தில் ஒரு தீர்க்கதரிசியாக தனது ஊழியத்தை ஆரம்பித்தார். எரிகோவுக்கு வந்த தண்ணீர் உவர் ஓடையிலிருந்து வந்தது. அது சுவையற்றதாகவும் ஆரோக்கிய மற்றதாகவும் இருந்தது. எலிசா அதன் ஊற்றிற்கு சென்று ஒரு அற்புதத்தை நிகழ்த்தினார். அது மோசே மாராவின் ஊற்றுகளில் செய்தது போல் இருந்தது. இந்த நாளிலிருந்து அது எலிசாவின் ஊற்று என்று அறியப்படுகிறது.

மறுபடியும் நாம் வாசிப்பதாவது: இந்த "தீர்க்கதரிசியின் புத்திரர்களில்" ஒருவன் மரித்துப்போனான். அவனது விதவை தாய் கஷ்டத்தில் இருந்தாள். தீர்க்கதரிசி எலிசா விசுவாசத்தை அப்பியாசப்படுத்தும்படி அவளுக்கு உதவினார். அவளுக்கு ஒரு குடம் எண்ணெய் இருந்தது. அந்த எண்ணெயை மற்ற பாத்திரங்களில் ஊற்றி அவை நிரப்பும் வரை பெருகிறது. அதைக்கொண்டு அவளது கடனை அடைக்கும்படி செய்தார். அவர் செய்த அநேக அற்புதங்களில் ஒரு மறுசீரமைத்தல் குறிப்பிடத்தக்கது. அதில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது, நமது பாடத்திற்கு தொடர்புடையது. மரித்த ஒரு பையனுக்கு ஜீவனை திரும்பி வரச் செய்து அவனுக்கு சுகத்தை கொடுத்தது. எலிசாவின் அனுபவங்களில் உலகளாவிய கவனத்தை ஈர்த்ததும், பொதுவான கண்டனத்துக்குரியதுமாக இருந்தது. நாற்பத்தி இரண்டு வாலிபர்களை சபித்தது ஆகும். இவர்கள் நியாயப்பிரமாணத்தின்படி இருபத்தி ஒன்று வயதிற்கு கீழ்ப்பட்டவர்களாக இருந்ததால் அந்த அர்த்தத்தில் பிள்ளைகள் என்று அழைக்கப்பட்டனர். "மொட்டை தலையா ஏறிப்போ" என்று எலிசாவை கேலி செய்தனர். 'உன்னுடைய எஜமானன் எலியா சுழற்காற்றிலே பரலோகத்திற்கு ஏறிப்போனாரே, நீயும் ஏன் அவர் கூட செல்லவில்லை? நீ மொட்டைத் தலையன், அல்லது உன் ஆண்டவனை இழந்தவன். எலியாவை ஒப்பிட்டுப் பார்க்கும் போது நீ தீர்க்கதரிசி என்று கூறுவதற்கு தகுதியற்றவன்.' (இது எங்களுடைய பொழிப்புரை)

எலிசா பிள்ளைகளை சபிக்கவில்லை. அவர் அவர்களை சபித்தார் என்று நாம் படிக்கும் போது, அதன் சரியான பொருள் அவர்களை கண்டனம் செய்தார் என்பதாகும். "வேதபாரகரே, பரிசேயரே, உங்களுக்கு ஐயோ" என்று இயேசு கடிந்து கொண்டது போல அது இருந்தது. அவரை கேலி செய்த பல்வேறு வயதுடைய வாலிபர்கள் மீது அவர் ஐயோ அல்லது சாபத்தை அறிவித்தார். அவர்களுக்கு ஏதாவது நடக்கும் என்று அறிவித்தார். தெய்வீக ஞானம் கணக்குத் தீர்த்து அவரை நிரபராதியாக்குகிறார். உடனே இரண்டு பெண் கரடிகள் ஒழுங்கீனமாக கும்பல் மீது வந்து அவர்களை காயப்படுத்தி பீறிப்போட்டது. வேதாகமத்திற்கு விரோதிகள், நாற்பத்தி இரண்டு பேரை கொன்று போட்டது என்று வாசிப்பர்கள். ஆனால் அப்படி எதுவும் சொல்லப்படவில்லை.

இஸ்ரயேலர்கள் ஆகாப் ராஜா மற்றும் யேசபேல் ராணியின் ஆளுகையின் கீழ் விக்கிரகாராதனைக்கு சென்றார்கள். எலியா தீர்க்கதரிசி மெய்யான மதத்தை திரும்ப நிலை நிறுத்தினாலும் ராஜா, ராணி மற்றும் பெரும்பாலான ஜனங்கள் சும்மா அதற்கு இடங்கொடுத்தார்கள்.

எலிசா மேல் வசைமாரி பொழிந்தவர்கள் எரிகோவைச் சேர்ந்த பத்து வயதுமுதல் இருபது வயது வரை உள்ள ரவுடி கூட்டமாக ஒருவேளை இருந்திருக்க வேண்டும். கேலி செய்து கொண்டு தீர்க்கதரிசி எலிசாவை அவர்கள் பின்தொடர்ந்து வந்தது, அவர்களது பெற்றோர்களின் தூண்டுதலாகத்தான் இருக்க வேண்டும். இது அவரது செல்வாக்கை களங்கப்படுத்துவதற்காக இருந்திருக்க வேண்டும். தீர்க்கதரிசியின் கண்டனத்தை தொடர்ந்து தெய்வீக தீர்ப்பு பீறிப்போடப்பட்டவர்களுக்கும் அவர்களது பெற்றோர்களுக்கும் அதைக் கேள்விப்பட்ட அனைவருக்கும் ஒரு நீதியான தண்டனையாகவும் ஒரு பிரயோஜனமுள்ள ஒரு பாடமாகவும் இருந்தது.

### எலிசா ஒரு நிழலாக கருதப்பட்டார்

எலியா எடுத்துக்கொள்ளப்பட்ட பிறகு, எலிசாவின் அனுபவங்களில் நமது அக்கறை அதிகரிக்கிறது. எலிசாவை நாம் ஒரு நேர்மறை குணலட்சணம் உடையவராக கவனிக்கிறோம். நாம் எலியாவை சுவிசேஷ யுகத்தின் மெய்யான ஆசாரியர்களுக்கு ஒப்பிட்டும் எலிசாவை மெய்யான லேவி வகுப்பாருக்கு ஒப்பிட்டும் முன்னரே நாம் அறிவித்திருந்தோம். எலிசா பழைய ஏற்பாட்டு கால விசுவாசிகளுக்கு நிழலாகவும் கூறலாம். மேசியாவின் ராஜ்யத்தில் உலகத்திற்கு போதித்தலும் ஆசீர்வதித்தலும் அவர்கள் கையில் கொடுக்கப்படும். "பூமியெங்கும் பிரபுக்களாக அவர்கள் இருப்பார்கள்." இந்த கருத்திலிருந்து நாம், எலிசா, முதலாவது ஆவியினால் ஜெனிப்பிக்கப்பட்ட இரண்டாம் தர வகுப்பாரை குறிப்பதாகவும் அவர் யோர்தானை கடப்பது மெய்யான லேவியின் இந்த வகுப்பாரின் மரணத்தை குறிப்பதாகவும் நாம் நினைக்கலாம்.

இந்த கருத்துடன் எலிசாவின் பிற்கால முன்னேற்றம், அவரது நியாயந்தீர்ப்பு மற்றும் சீரமைப்பின் வேலை முன்னரே குறிப்பிட்டபடி, மேசியாவின் ராஜ்யம் ஆரம்பிக்கும் போது, "பிரபுக்களின்" கீழே நாம் எதிர்பார்க்க வேண்டும். நீரூற்றை ஆரோக்கியப்படுத்தினது சத்திய ஓடையை குணப்படுத்துதலைக் குறிக்கும். அநேக நூற்றாண்டு காலங்களாக தப்பறைகளும் மூட நம்பிக்கைகளும், நீங்கள் சாகவே சாவதில்லை என்கிற சாத்தானுடைய பொய்யுடன் சேர்ந்து சத்திய தண்ணீரை உப்புத் தன்மையுள்ளதாகவும் சுவையற்றதாகவும் ஆரோக்கிய மற்றதாகவும் ஆக்கியிருந்தது. அந்த நீரூற்றில் உப்பை போடுவது, அசத்தியத்திலிருந்தும் தப்பறையிலிருந்தும், "பூமிக்கு உப்பு" என்று சொல்லப்பட்டிருக்கிற மகிமையில் இருக்கும் சபையின் ஒத்துழைப்புடன் சுத்தப்படுத்துவதை குறிக்கிறது. சத்திய ஓடையை சுத்தப்படுத்துவது மகிமையடைந்த சபை மூலமாக வரும். எனினும் அது பழைய ஏற்பாட்டு கால விசுவாசிகள்

மூலமாக, புதிய உடன்படிக்கையின் ஒரு பாகமாக வரும். பிறகு அது உலக மனுக்குலத்திற்கு யூதர்கள் மூலமாக வரும். இதைத்தான் பரிசுத்த பவுல் ரோமர் 11:25-33இல் நமது கவனத்திற்கு கொண்டு வருகிறார்.

“பானையிலிருந்த சாவு” கர்த்தரின் மகிமையின் ராஜ்யத்தின் ஆசீர்வாதத்தின் மூலம் திறம்பட நீக்கப்படும். பூமியானது தனது பலனைக் கொடுக்கும். வனாந்தரம் புஷ்பத்தைப் போல செழிக்கும். வனாந்தரத்தில் தண்ணீர்கள் பாய்ந்தோடும். கர்த்தருடைய ஆசீர்வாதம், தீர்க்கதரிசிகளின் புத்திரர் அடையாளமாக குறிப்பிட்டது போல, எல்லா இடங்களிலும் இருக்கும். இவர்கள் தங்களை தங்கள் தேசத்தின் விக்கிரகாராதனையிலிருந்து பிரித்துக்கொண்டு தீர்க்கதரிசிகளின் பின்னடியார்களாக தீர்க்கதரிசிகளின் போதனைகளுக்கு கவனம் செலுத்தி தீர்க்கதரிசனம் உரைத்தார்கள்.

விதவையின் எண்ணெய் குடத்தின்மேல் வந்த ஆசீர்வாதம் அடையாளமான முக்கியத்துவம் வாய்ந்தது. அந்த காலத்தின் ஜனங்களுக்கு எண்ணெய் எவ்வளவு மதிப்பு வாய்ந்ததாக இருந்தது என்பதை நாம் உணருகிறோம். அது அவர்களது உணவின் ஒரு பகுதி மாத்திரமல்ல, அது அவர்களுக்கு மருந்தாகவும் வெளிச்சத்தைத் தரக்கூடியதாகவும் இருந்தது. ஆகையால் தீர்க்கதரிசி மூலமாக வந்தது எல்லாம் இளைப்பாறுதலின் ஆசீர்வாதங்களுக்கு மிகவும் அழகான ஒரு சித்திரமாக இருக்கிறது. அது ஏற்ற காலத்தில் வரும் என்று எதிர்பார்க்கிறோம். பாத்திரவான்கள் அனைவருக்கும் அது கிடைக்கும்.

மேசியாவின் ராஜ்யமாகிய புதிய யுகத்தின் மகா அம்சங்களில் ஒன்றாக எலிசா மரித்தவனை உயிர்ப்பித்தது இருக்கிறது. இந்த வல்லமை, எலிசாவினால் அடையாளப்படுத்தப்பட்ட “பிரபுக்களினால்” அப்பியாசப்படுத்தப்படும் என்று நாம் நம்புகிறோம். இதன் மூலம் அதிக சலுகை பெறுகிறவர்கள். எலிசாவினால் பிரதிநித்துவப்படுத்தப்பட்ட “பிரபுக்களை” மிகவும் முழுமையாக உணர்ந்து கொண்டு ஏற்றுக்கொண்டவர்களும் குழந்தையின் பெற்றோர்களும் ஆகும். இந்த குழந்தையைத்தான் எலிசா உயிரோடு எழுப்பியிருந்தார். தீர்க்கதரிசியின் வசதிக்கு கிருபையான ஏற்பாடு செய்திருந்தார்.

எலிசா வகுப்பாரின் விரோதிகளின் மேலான நியாயந்தீர்ப்பு நாற்பத்தி இரண்டு பேர் பீறிப்போடப்பட்டதின் மூலம் நிறைவேறியது. இது மேசியாவின் ராஜ்யத்தில் தெய்வீக ஏற்பாடுகளுக்கு எதிரான அனைவர் மேலும் செயல்படுத்தப்படும் நியாயமான தீர்ப்பை நிழலாக காண்பித்தது. வேத வாக்கியங்களின் உறுதிமொழியாவது: “கர்த்தருடைய நியாயந்தீர்ப்புகள் பூமியிலே நடக்கும் போது பூச்சக்கரத்து குடிகள் நீதியை கற்றுக்கொள்ளுவார்கள்.” “நியாயம் நூலாகவும் நீதி தூக்கு நூலாகவும் வைக்கப்படும்.”

**R4758**

## DEFEAT THROUGH DRUNKENNESS

## குடிவெறியின் மூலம் தோல்வி

1 ராஜாக்கள் 20:12-21

“திராட்ச ரசம் குடிப்பது ராஜாக்களுக்கு தகுதியல்ல. மதுபானம் பிரபுக்களுக்கு தகுதியல்ல.” நீதிமொழிகள் 31:4

இன்றைய பாடம், இஸ்ரயேல் தேசத்தை சீரியாவின் ராஜாவாகிய பெனாதாத்தும் அவனோடு கூட முப்பத்திரண்டு ராஜாக்களும் மற்றும் பெரிய படையும் படையெடுத்ததைப் பற்றி விளக்குகிறது. அந்த காலத்தின் போர் முறையெல்லாம் இந்த காலத்தைக் காட்டிலும் முற்றிலும் வேறானதாக இருந்தது. இஸ்ரயேலரது வீரர்களின் எண்ணிக்கை குறைவாக இருந்தது. ஆயுதங்களும் தரம் தாழ்ந்ததாக இருந்தன. சீரியா ராஜாவின் நோக்கம் அபத்தமானதாக இருந்தது. அவர்கள் பொன், வெள்ளியை மாத்திரமல்ல மற்ற விலையுயர்ந்த பொருட்களையும், பழங்கள், தானியங்கள் முதலானவைகளையும் எடுத்துச்செல்வார்கள்.

நமது கால சாட்சிகள் எல்லாம் ராஜ தந்திரத்தின் திசையில் முன்னேற்றத்தை காண்பிக்கின்றன. தற்போது போர்கள் மற்றும் படையெடுப்புகள் எல்லாம் பரோபகார நோக்கத்தில் இருக்கின்றன. அதாவது மோசமான அரசாங்கத்திடமிருந்து ஜனங்களை விடுவிக்கவோ அல்லது அவர்களது கடன்களை அடைக்க வலியுறுத்தவோ அல்லது நாட்டை நாகரீகத்துக்கு திறக்கவோ அல்லது அவர்களை பொறுப்புள்ள பிரதிநிதிகளின் அராசங்கத்திடம் ஒப்படைக்கவோ அல்லது அதிகமாக மத சுதந்தரத்துக்கோ படையெடுப்புகள் நடக்கின்றன. படையெடுக்கும் படை கொள்ளையடிப்பது மற்றும் திருடுவது மறுக்கப்படுகின்றன. தோல்வியடைந்த ஜனங்களிடமிருந்து எடுக்கப்பட்டவை வேறு வழியில் பெறப்படுகின்றன. காப்பீட்டிற்கு வரிவிதித்தல், கொள்ளையடிப்பதைக் காட்டிலும் இன்னம் அதிகமான தொகை பெறப்படுகின்றன. இவையெல்லாம் உயர்ந்த தார்மீக உணர்வை கூறுகின்றன. எனினும் அதிகம் பாசாங்காகவே இருக்கிறது. இந்த பாசாங்குக்கு தேவையானது ஒரு குறிப்பிட்ட அளவு இந்த விஷயத்தில் மன பதற்றங்கள் என்று குறிக்கின்றது.

### யுத்தம் கர்த்தருடையது, நிச்சயம் அவர் வென்றார்

பெனாதாத் தனது கோரிக்கையாக ஆகாப் ராஜாவிடம் சொல்லி அனுப்பியதாவது: “உன்னுடைய வெள்ளியும் உன்னுடைய பொன்னும் என்னுடையது; உன்னுடைய ஸ்திரீகளும் உன்னுடைய குமாரருக்குள் சமர்த்தாயிருக்கிறவர்களும் என்னுடையவர்கள்.” ஆகாப் ராஜா, அவனது படைகளின் பெருக்கத்தை அறிந்து அதை எதிர்க்க தயாராயில்லாமல், அவன் பதிலளித்தாவது: “ராஜாவாகிய என் ஆண்டவனே, உம்முடைய வார்த்தையின் படியே, நானும் எனக்கு உண்டான யாவும் உம்முடையவைகள் தான்.” ஆனால் படையெடுத்தவன் தனது கோரிக்கையை அதிகப்படுத்தி, அந்த செல்வத்தோடு, இஸ்ரயேலின் உயர்ந்த ஜனங்களின் சொத்துக்களும் அவர்களது பிள்ளைகள், மனைவிகள் முதலானோர் என்று கூறியதால், அதை மறுத்து அதிகப்படியான கோரிக்கை நிறைவேற்றப்பட மாட்டாது என்று செய்தி அனுப்பப்பட்டது. அதன்பின் படையெடுத்தவர்கள் இஸ்ரயேலின் தலைநகரம் சமாரியாவின் சுவர்களுக்கு எதிராக போருக்கு தயார்படுத்தினார்கள்.

இந்த சமயத்தில் தேவன், இஸ்ரயேல் ராஜாவிடம் ஒரு தீர்க்கதரிசியை அனுப்பி, போர் தொடுத்தவர்களை உன் கையில் ஒப்புக்கொடுத்து உனக்கு வெற்றியை கொடுப்பேன் என்று சொல்லச் சொன்னார். ஆச்சரியப்பட்ட ஆகாப், யாரைக் கொண்டு ஜெயம் கிடைக்கும் என்று கேட்டான். ஆகாப்பின் கீழ்

மாகாணங்களின் அதிபதிகளின் சேவர்களைக் கொண்டு என்று பதில் வந்தது. இந்த அடையாளத்தினால் வெற்றியின் தேவன் தம்முடன் உடன்படிக்கை பண்ணியிருந்த தேசத்தை தமது வல்லமையின் மூலம் பாதுகாத்தார். அவர்களது விசுவாசத்தையும் உண்மைத்தன்மையையும் புதுப்பித்தார்.

தெய்வீக கட்டளை பின்பற்றப்பட்டது. இருநூற்றி முப்பத்திரண்டு மாகாண அதிபதிகள், சிறிய படையாகிய ஏழாயிரம் பேருடன் நகரத்தை விட்டு எதிரியை சந்திக்க வெளியே புறப்பட்டார்கள். வெளிப்படையாக இது மோசமான முடிவாக இருந்தது. ஆனால் கர்த்தரே தளபதியாக இருந்து போரின் முடிவை மாற்றிப்போட்டார். பெனாதாத்தும் அவனுக்கு உதவியாக வந்தவர்களும் கூடாரங்களில் குடித்து வெறி கொண்டிருந்தார்கள். மனிதர்களை உயிரோடு பிடிக்கும்படி சீரியர்கள் கட்டளையிடப்பட்டார்கள். ஆனால் அதை அவர்கள் செய்யவில்லை. சீக்கிரத்தில் சீரியாவின் படை சிதறி, பின்வாங்கிப் போனார்கள். மனித ரீதியாக கூறுவோமானால் பெனாதாத்தின் அதிக நம்பிக்கையினாலும் மது வெறியினாலும் தோல்வி அடைந்தான்.

### நாம் பெறக்கூடிய பாடம்

சமாதானத்தையும் நீதியையும் தேடுகிற நேர்மையான, பரிசுத்தமான மனுக்குலத்தை மதிக்கிறவர்கள் தேவனுடைய ஜனங்களாகிய இஸ்ரயேலருடன் ஒப்பிடப்படலாம். பெனாதாத், அவனது முப்பத்தி இரண்டு ராஜாக்கள் மற்றும் அவனது படைகளும் சாத்தானுக்கும் அவனது அநீதியின் பல்வேறு சேனைகளுக்கும் ஒப்பிடப்படலாம். இந்த சேனைகளுக்கு நமது விருப்பப்படி பெயர் சூட்டலாம். இந்த ஒரு பகுதியினரும் மற்ற பகுதியினரும் மிகவும் கண்டிக்கப்படத்தக்கவர்கள். இந்த ராஜாக்கள் பலர் வாழ்க்கையின் தேவைகளை கையாளுவதன் மூலம் ஜனங்களின் நலன்களை தாக்குகிற பல்வேறு டிரஸ்டுகளை குறிப்பிடலாம். இந்த ராஜாக்களில் மற்றவர்கள் அரசியல்வாத ஒட்டுண்ணிகளை குறிக்கலாம். மற்றவர்கள் பொது ஜனங்கள் மேல் பல்வேறு தீமைகள் மற்றும் தன்னடக்கம் அற்றவர்களையும் குறிக்கலாம். இப்படியாக இந்த படைகள் ஜனங்களுக்கு எதிராக அணிவகுத்து இருப்பது திகிலூட்டுவதாக இருக்கிறது. விசேஷமாக அவர்கள் செல்வம் அதிகரித்திருக்கும் போது இப்படி இருக்கிறது.

இந்த பல்வேறு காரியங்களை பற்றிய கோரிக்கைகள் முதலாவது மதிப்பிற்குரிய பொது ஊழியர்கள் மேல் வருகிறது. இவர் ஆகாபைப் போல, பொது ஜனங்கள் காப்பாற்றப்படும்படி, தங்களை இழிவுபடுத்தப்படக்கூட கீழ்ப்படுத்த வேண்டும். கோரிக்கைகள், விரிவுப்படுத்தப்படும் போது, பொதுவான கொள்கையே நோக்கம் என்பது வெளியரங்கமாக இருக்கும் போது, கர்த்தருடைய சத்தம் கேட்டு கவனிக்கப்பட வேண்டும், அதிகமான எதிர்ப்பு கொடுக்கப்பட வேண்டும்.

ஆகாப்பின் எதிர்ப்பு வெறும் தற்காப்புக்காக மாத்திரமல்ல. ஜனங்களின் அதிபதிகளாகிய நீதியை நேசிக்கிற பிரபுக்கள், ஜனங்களின் உரிமைகள், சந்தோஷம் மற்றும் நன்மைகளுக்காக படையெடுத்தவர்களுடன் போரிட முதலில் செல்ல வேண்டும். நீதிக்காக நிற்கிற இந்த பிரபுக்கள் அல்லது தலைவர்கள், தைரியமுள்ள நீதியை நேசிக்கிற ஜனங்கள் அனைவராலும் ஆதரிக்கப்பட வேண்டும்.

### சமீபத்தில் மது அரசன் ஏராளமான தோல்விகளை அடைகிறான்

ஒவ்வொரு மனிதனும் பெண்ணும், சரி மற்றும் தவறு என்பதின் ஒவ்வொரு கேள்வியிலும் நேர்மறை நம்பிக்கை கொண்டிருக்க வேண்டும். அவர்கள் சரியின்பக்கம் தங்களது நிலையை எடுக்க தைரியத்தை பெற்றிருக்க வேண்டும். கிறிஸ்தவர்கள் தங்கள் செயல்பாடுகள் மேலானவைகளில் இருக்கும்படி பார்க்க வேண்டும். மற்றவர்களால் தெளிவாக பார்த்து, சிறப்பாக சேவை செய்ய முடியாது. சரி மற்றும் தவறு, சமத்துவம் மற்றும் சமத்துவமின்மை பற்றிய ஒவ்வொரு கேள்வியிலும் ஒவ்வொரு தேவனுடைய பிள்ளையும் நீதிக்காக நேர்மறை சக்தியை கொண்டிருக்க வேண்டும்.

நீதியின் எதிரிகளில் மிகவும் சக்திவாய்ந்தவன் மது அரசன் ஆகும். அவன் சமீபத்தில் ஏராளமாக தோல்விகளை அடைந்து வருகிறான். அவன் மோசமாக முடங்கி போனதையும் ஏற்றுக்கொள்கிறான்.

சமீபத்தில் ஒரு நூதனமான அணி வகுப்பு சிக்காகோ தெருக்களில் நடத்தப்பட்டது. அது முதலாவது ஜெனரல் (F.D. Grant) கிராண்ட் அமெரிக்க படையின் மேஜர் ஜெனரல் என்பவரது தலைமையில் நடந்தது. பிறகு பதவியிலிருந்து இறங்கி, அணி வகுத்தவர்களை அடிக்கடி தனது தொப்பியை கழற்றி ஏறக்குறைய இரண்டு மணி நேரம் மதிப்பாய்வு செய்தார். ஜெனரல் வெளிப்படையாக மதுப்பழக்கத்திற்கு எதிராக தனது மானசீகமான ஆதரவை கொடுக்க விரும்பினார்.

ஸ்பிரியஸ்பீல்டு ரிபப்ளிக்கன் பத்திரிக்கை இதைக் குறித்து தெரிவித்த கருத்தானது: "சீக்கிரத்தில் எதிர்பாராமல் மதுவிலக்கு தலைவராகக் கூடிய சாத்தியம் பெற்ற ஜெனரல் F.D. கிராண்ட் ஒரு பேட்டியில் அவர் கூறியிருந்ததை விவரித்திருந்தது. 'இந்த நாட்டை மதுதேவதை என்ற புற்று நோயிலிருந்து காப்பாற்றுவதற்கு எனது சரீரத்தை பலியாக கொடுக்க முடிந்தால் நான் இதைச் செய்ய சலுகை அளித்த சர்வ வல்லவருக்கு நான் நன்றி சொல்லுவேன். எனக்கு பணி நியமனம் செய்யும் அதிகாரம் கிடைத்தால், பூரண மதுவிலக்கை கடைபிடிக்கிறதற்கான நிரூபணத்தை என்னிடம் காண்பிக்காமல் ஒரு சிறிய நியமனத்தைக் கூட யாரும் பெறமாட்டார்கள்.' "


ஏழாம் சபையின் தூதனாகிய

சகோ.C.T. **ரசல்** அவர்களின் ரீ-பிரிண்ட்ஸின் தமிழாக்கத்தை வெளியிடுகிறோம்

வெளியிடுபவர் :



சகோ. R. **செல்வராஜ்,** சென்னை வேதமாணவர் சபை,

எண். 22, முதல் தெரு, ராஜீவ் நகர், காலடிப்பேட்டை, திருவொற்றியூர், சென்னை - 600 019.

கைபேசி : 97909 00030. மின்னஞ்சல் : mbsaselvaraj@gmail.com

Website : www.thestudiesinthescriptures. com



**FOR PRIVATE CIRCULATION ONLY**